**1**

# இலக்கண வரலாறு

## இலக்கியமும் இலக்கணமும்:

இலக்கியம் தாய்; இலக்கணம் சேய். இலக்கியம் தேமாங்கனி; இலக்கணம் தீஞ்சுவைச்சாறு. இலக்கியம் பெருவிளக்கு; இலக்கணம் அதன் ஒளி. இலக்கியம் எள்; இலக்கணம் எண்ணெய். இந்த உறவு முறையை - பிணைப்பு முறையை நம் முன்னோர் நன்கு அறிந்து தெளிந்திருந்தனர். இதனாலேயே,

'இலக்கியம் இன்றி இலக்கணம் இன்றே
எள்ளின் றாகில் எண்ணெயும் இன்றே
எள்ளினுள் எண்ணெய் எடுப்பது போல
இலக்கியத் தினின்றும் எடுபடும் இலக்கணம்'

எனக் கூறிப்போந்தனர். எனவே, இலக்கியப் பெருந்தருவின் நிழலில் எழுந்து நிற்பதே இலக்கணம் என்பது பெறப்படும். இலக்கியமும் இலக்கணமும் வேறுபட்ட நிலையுடையன அல்ல; ஒருவழிப்பட்ட ஒற்றுமையுடையனவே ஆகும்.

## இலக்கணத் தோற்றம்:

இலக்கியம் பலவாய்ப் பல்கிப் பெருகி வளரத் தலைப்படும் காலத்தில் மொழியினை ஒழுங்குபடுத்த எண்ணும் முதறிவாளர் கண்ட முறையே இலக்கணமாகும். இவர்கள், தாம் வாழும் காலத்திற்கும் அதற்கு முன்பும் உள்ள மொழி வழக்கு அனைத்தையும் அறிந்து வகைப்படுத்திக் கூற முயல்வார்கள். இம்முயற்சியின் விளைவே இலக்கணத் தோற்றம் எனலாம். தொல்காப்பியர் முந்து நூல் கண்டு முறைப் பட எண்ணி இலக்கணம் வகுத்தார் எனச் சிறப்புப்பாயிரம் செப்புகின்றது. பாணினிமுனிவர், வேதம் முதலிய வடமொழி நூல்களைக் கற்றுத் தேர்ந்து அவற்றின் சாரத்தைப்பிழிந்து பாணினியமாக வடித்துக் கொடுத்தார் என்று கூறுவர். எனவே நூல்கள் பல எழுந்த பின்பே நூல்களின் பண்பு நுவலும் இலக்கணங்களும் தோன்றி யிருத்தல் வேண்டும். இதுகாறும் கூறியவற்றைக்கொண்டு இலக்கியங்களின் மொழியமைப்பைக் கொண்டு மட்டும் இலக்கணம் தோன்றியது என முடிவு கட்டி விடுதல் கூடா. இலக்கணத் தோற்றம், இலக்கியத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டதன்று. வழக்கு மொழியின் வாழ்வையும் வளத்தையும் மதித்து அதனையும் தழுவி ஒழுகும் உயர்வுடையது. இதனால்தான், தொல்காப்பியச் சிறப்புப் பாயிரம், ‘வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின் எழுத்தும் சொல்லும் பொருளும் நாடித்’ தொல்காப்பியம் தொகுக்கப் பெற்றது என அந்நூலின் இயல்பினை எடுத்துரைக்கின்றது. இலக்கணப் புலவர்கள் இலக்கிய அமைப்பினை மட்டும் தழுவி, உலக வழக்கினை உதறித் தள்ளிவிட வேண்டும் என்ற உள்ளம் படைத்தவர்கள் அல்லர். அவர்களது பரந்த நோக்கமெல்லாம் மொழி ஒரு திறப்பட்டுச் செல்ல வேண்டும் என்பதே. இதனால், அவர்கள், தம் காலங்கடந்த புலமையை ஒரு கட்டுக்குள் அடக்கிக் கொண்டு வாழாமல், இருவேறு கட்டுக்குள் அடக்கிக் கொண்டு வாழாமல், இருவேறு வழக்கின் இயல்பினையும் அறிந்து ஏற்பன ஏற்றுத் தள்ளுவன தள்ளி இலக்கணப் படைப்புக்களை ஈந்துள்ளார்கள்.

## இலக்கணம் - சொல்லாராய்ச்சி;

இலக்கணம் என்னும் சொல், லக்ஷணம் என்னும் வட மொழிச் சொல்லின் சிதைவு என்பர். ஆனால் வடமொழியில் நாம் கருதும் இலக்கணத்தை லக்ஷணம் என்று சொல்வதில்லை. வியாகரணம், சப்த சாஸ்திரம் என்று கூறுவார்கள். இதனால்



இலக்கணம் என்னும் சொல், லக்ஷணம் என்பதன் சிதைவு என்பது பொருந்தாது. இலக்கு என்னும் தமிழ்ச்சொல், அணம் என்னும் விகுதிபெற்று இலக்கணம் என ஆயிற்று என்று கோடலே பொருந்தும். இச்சொல் சிறந்த தமிழ்ச்சொல்லே; இதனைப் பற்றிய விரிவான, ஆராய்ச்சியினைச் செந்தமிழ்ச் செல்வி 22-ல் காண்க.[1] இலக்கணம் என்ற சொல்லினை முதன் முதலில் வழங்கியவர் தொல்காப்பியனாரே ஆவர். இவர், இச்சொல்லினை, ‘பல பொருளை உய்த்துணர்ந்து அவற்றின் இயல்பினை உள்ளவாறு அறிவித்தற்குக் காட்டப்படும் வரையறை’ என்ற பொருளிலேயே ஆட்சி செய்துள்ளார்.[2] சிலர், புலம் என்னும் சொல், தமிழ் இலக்கணத்தைக் குறிக்கும் என்பர். இதற்குச்சான்றாகப் ‘புலம் தொகுத்தோனே போக்கறுபனுவல்’ என்னும் பனம்பாரனார் கூற்றைக் காட்டுவர். வேறுசிலர், இயல் என்பது இலக்கணத்தினைக் குறிக்கும் தமிழ்ச்சொல் என்பர்.

## இலக்கணத்தால் ஏற்படும் நன்மை:

இலக்கணத்தை ஏன் படிக்க வேண்டும்? அதனால் ஏற்படும் நன்மை என்ன என்று இன்று சிலர் கேட்க முற்பட்டிருக் கிறார்கள். இவர்களுக்கு ஏற்ற விடையினை அளிக்க வேண்டியது நம் பொறுப்பாகும்.

1. இலக்கணத்தால் என்ன நன்மை என்பதற்கு ஆறுமுக நாவலர் அவர்கள், பிழையறப் பேசவும் எழுதவும் உதவுவது இலக்கணம் என அழகாக விடை கூறியுள்ளார்கள். மனிதன், தன் எண்ணத்தினை வெளிப்பத்தப் பயன்படும் கருவிகளுள் எழுத்தும் பேச்சும் தலைசிறந்தன. இவ்விரண்டுமின்றேல் வாழ்வேது? வளர்ச்சியேது? இத்தகைய வாழ்வோடு இணைந்து பேச்சினையும் எழுத்தினையும் ஒழுங்குபத்தித் தரும் சாதனமாக இலக்கணம் இலங்குகின்றது.

2. எழுத உதவுவதோடு படிக்கவும் உதவுவது இலக்கண மாகும். இலக்கண அறிவு இன்றேல் ஒரு நூலையும் நாம் படித்தல் இயலாது. இந்த முடிபு, தமிழினைத் தாய் மொழியாகக் கொண்ட நமக்கு அவ்வளவு எளிதில் புலப்படாது. ஏனெனில், தமிழ், வழக்கில் இருக்கும் வளமான மொழி. ஆனால் வடமொழி, இலத்தீன், கிரீக் முதலியவற்றில்

1. மொழியறிஞர் ஞா. தேவநேயப் பாவாணர் கட்டுரை.
2. க. வெள்ளைவாரணன், தமிழ் இலக்கிய வரலாறு தொல்காப்பியம். பக்கம். 113.

வேண்டுமாயின், இலக்கண அறிவு உள்ள நூல்களை உணர இன்றியமையாததாகும். அப்பொழுதுதான், மிகமிக அம்மொழிகளை நாம் புரிந்து கொள்ள முடியும்.

3. பொருளினைத் தெளிவாக அறிந்து கொள்ளுதற்கு உரியதும் இலக்கணம் ஆகும். இம்முறையில் இலக்கணம் செய்யுள் வழக்குக்கு இன்றியமையாதது என்பதனை அறிதல் வேண்டும். உதாரணமாக ஒன்றனைக் காண்போம். வாழை பழம் என்பதற்கும் வாழைப்பழம் என்பதற்கும் வேறுபாடு உண்டு. வாழைபழம் என்பது, வாழையும் பழமும் என உம்த் தொகையாகப் பொருள்படும். வாழைப்பழம் என்பது வாழையினது பழம் என வேற்றுமைத் தொகையாகப் பொருள்படும். இந்த வேறுபாட்டுணர்ச்சியை அறிந்து கொள்ள இலக்கணம் உதவுகின்றது; நன்மை செய்கின்றது.

4. மொழியினைக் கட்டிக்காத்துச் சொம்மொழியாக்கும் பேராற்றலும் இலக்கணத்திற்கு உண்டு. ஒரு மொழி, பல்வேறு கிளை மொழிகளாகப் பிரிந்து போய் விடாமல், ஒருமொழி என்ற கூட்டுக்குள் நிறுத்திவைக்க இலக்கணம் முயல்கிறது. இப்பணியில் இலக்கணம் மன்னவனைப் போல ஆட்சி செய்கிறது. தமிழைப் பேசுவோர் எங்கிருந்தாலும், எவ்வாறு பேசினாலும் எழுத்துலகில் ஒன்றுபட்டு நிற்கக் காண்கிறோம். பேச்சு மொழி புரியாவிடினும் எழுத்து மொழி இனிமை தரப்பார்க்கிறோம். இதற்குக் காரணம், எழுத்துமொழியில் ஏற்பட்ட ஒற்றுமையே யாகும். இவ் வொற்றுமை இலக்கணத்தால் விளைந்தது எனலாம். இலக்கணம் மட்டும் இல்லாதிருக்குமானால், இன்றிருக்கும் பேச்சுத்தமிழ், எத்துணையோ கிளைமொழிகளாகத் தனித்தனி பிரிந்து விடும். இந்தப் பிரிவைத் தடுத்து ஒற்றுமையை நிலை நிறுத்துவது இலக்கணமாகும். இக்கொள்கையினைச் சில மொழி நூலார்கள் ஒப்பமாட்டார்கள். பேச்சுத்தமிழுக்கும் இலக்கணம் கண்டு அதனையும் வளர்க்க வேண்டும் என்று கூறுவார்கள். இவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் 'பேச்சுத் தமிழ்க் காதல்' எத்தகையது என்பது புரியவில்லை. தமிழில், எழுத்துத் தமிழும் பேச்சுத்தமிழும் இடைவெளி கொண்டனவாய், இருவேறு மொழிகள் போன்றனவாய்ச் செல்லவில்லை. பெரும்பாலும் ஒற்றுமைப் பட்டே செல்கின்றன. மேலும் பேச்சுத்தமிழ், சார்ந்திருக்கும் இடத்தால் வேறுபாடு சிறிது அடைந்துள்ளது. இப்பேச்சுத் தமிழினை அப்படியே எழுதுதல் வேண்டும் என எண்ணி எழுதியவர்கள் ஏற்றம் பெறவில்லை; வெற்றி பெறவில்லை. இந்நிலையில் பேச்சுத் தமிழை வளர்த்து அதனால் பல கிளை மொழிகள் உருவாக மொழியியலார்கள் வழி வகுத்துக் கொடுத்து விடுதல் கூடாது.



## இலக்கணம் சட்டமா?

இலக்கணம் மொழியின் சட்டம்; அதன்படி நடக்க இயலாது எனக் கருதிச் சிலர் அஞ்சுகின்றனர். மற்றும் சிலர், இலக்கணம் சட்டமே; அது வாழ்வின் உயிர்நாடி எனக்கருதி அடிமையாகின்றனர். முன்னவர் மொழியறியாதவர்; பின்னவர் வாழ்வறியாதவர். இலக்கணத்தினைக் கண்டு அஞ்ச வேண்டியதும் இல்லை. இலக்கணத்திற்கு அடிமையாக வேண்டியதும் இல்லை. இலக்கணம் மொழியின் பிழிவு; கலங்கரை விளக்கம்; சட்டமன்று. சட்டம் இவ்வாறு நட, இன்றேல் குற்றம் என ஆணையிடும். இலக்கணம் ஆணையிடாது. இவ்வாறு செல்லுதல் மரபு; இதனை விலகியும் தேவை வரும்போது செல்லலாம் எனத் துணை நிற்கும்.

இலக்கணத்தை அரசியல் சட்டம் போல ஆக்குவோர் மொழியின் நிலையறியாதவரே ஆவர். இவர்களால் ஏதும் செய்ய இயலாது; எழுதவும் இயலாது. சிறந்த இலக்கணப் புலவன் எழுத்தாளனாக முடியாது என்று இயம்புவார்கள். இது முற்றிலும் உண்மை. இலக்கணத்தை விடாப்பிடியாக வைத்துக்கொண்டு சட்டம் என எண்ணிக் கொண்டு பேசவும் எழுதவும் முற்படுவோர், பேசவும் முடியாது; எழுதவும் முடியாது. அவ்வாறு இலக்கண அளவுகோலைக் கொண்டு எழுதவும் பேசவும் துணிந்து விடுவார்களேயானால், அவர்கள் பேசும் பேச்சில், எழுதும் எழுத்தில் உயிர் இருக்காது; அமைப்பு இருக்கும்; அழகு இருக்காது. இதனால்தான், 'காரிகை கற்றுக் கவிபாடுவதிலும் பேரிகைக் கொட்டிப் பிழைப்பது நன்று' எனச் சொல்லி வைத்தார்கள். யாப்பிலக்கணத்தை வைத்துக் கொண்டு, ஒருவன் கவிதை யாக்கத் தொடங்கினால் அக்கவிதை, கவிதையாகாது. எலும்புச் சட்டகமாய் விடும்.

இலக்கணம் வேண்டாம் எனச் சொல்லுவோர் எழுத்திலும், பேச்சிலும் அவர்களை யறியாமலே இலக்கணம் அமைந்துள்ளது. எழுத்திற்கும் பேச்சிற்கும் ஏற்ற அமைப்பு முறை இன்றேல், வனப்பிருக்காது. ஆற்று வெள்ளம், கரைக்கு உட்பட்டுச் செல்லுமானால் கவின்பெறும்; இன்றேல் தாறுமாறாக ஓடிச் சென்று வறண்டொழியும். இலக்கணம் வெள்ளத்திற்கு இடும் கரை; கரை வேண்டாம் எனச் சொல்வோர் வளம் வேண்டாம் எனச் சொல்லுபவர் ஆவர். இவர்களே இலக்கணம் வேண்டாம் எனச் சொல்லி உள்ளம் சாம்புபவர்கள். இவர்கள் இலக்கணம் சட்டமன்று; அமைதி நெறி என உணர்ந்தால் இவ்வாறு கூற மாட்டார்கள்.

இலக்கணம் என்றும் ஒரே இயல்பினதாய் இருக்க வேண்டும் என எண்ணி இறுமாந்தவர்கள் அல்லர் நம் முன்னோர். மொழியின் வாழ்வும் கால வெள்ளத்தின் போக்கும் அறிந்தவர்கள்; மொழி உயிருள்ளது; வளரும்; மாறும் எனக் கண்டவர்கள். இதனால் இலக்கணம் செய்யும் போது, புறனடை அமைத்துப் போந்தார்கள். நன்னூலார், 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே' எனக் கூறுவார். இத்தகைய இலக்கணம் நம்முன்னோர் அறிந்து தெளிந்து அமைத்த மொழியமைப்பு என்றும் யாவரும் ஏற்றிப் போற்றும் இயல்பில் அமைந்தது ஆகும்.

## தமிழ் இலக்கணம்

தமிழ் இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ் என மூன்று பாகுபாடுகளையுடையது. முத்தமிழ், எனப் போற்றும் பெருமை யுடையது. 'முத்தும் முத்தமிழும் தந்து முந்துமோ வானுலகம்?' என இறுமாப்போடு கேட்பார் கம்பர். இம்முத்தமிழுக்கும் இலக்கணம் கண்டனர் நம்முன்னோர். கிடைக்காத அகத்தியம் முத்தமிழுக்கும் உரிய இலக்கண நூல் என்பர். முத்தமிழின் பிரிவுகள் ஒவ்வொன்றுக்கும் தனித் தனியே இலக்கணமும் அமைத்தனர். ஆயினும் இயற்றமிழ் இலக்கணமே, இலக்கணம் என்னும் பெயருக்குத் தனியுரிமை பூண்டதால் விளங்குகின்றது.

## இயற்றமிழ் இலக்கணம்:

செய்யுளும் உரைநடையும் ஆகியவற்றின் தொகுதி இயற்றமிழாகும். இப்பிரிவில் இலக்கியமும் அடங்கும். இலக்கணமும் அடங்கும். செந்தமிழால் இயன்ற செய்யுள்களும் உரை நடையும், கொடுந்தமிழால் அமைந்த செய்யுள்களும் உரைநடையும் இயற்றமிழே ஆகும். இத்தமிழின் இலக்கணத் தையே தமிழ் மக்கள் பெரிதும் வளர்த்துள்ளனர். தமிழின் உயிர்க் கிழவன் தொல்காப்பியன் இத்தமிழுக்கே இலக்கணம் கண்டான்.

## இலக்கணப் பிரிவு:

தொல்காப்பியர் எழுத்து, சொல், பொருள் என மூன்று பிரிவில் இலக்கணங்களைக் கூறியுள்ளார். இம்மூன்றனையும் மூன்று இலக்கணம் எனக் கொள்வோம். தொல்காப்பியப் பொருளதிகாரம் மிக விரிவுடையது. இப்பகுதியில், பொருள்,



உவமை, யாப்பு என்பன பற்றியும் கூறுகின்றார். இம்மூன்றனையும் பொருளிலக்கணம், அணியிலக்கணம், யாப்பிலக்கணம் என மூன்று தனி இலக்கணங்களாகக் கொண்டால் எழுத்தும், சொல்லும் இயையத் தொல்காப்பியம் ஐந்திலக்கண நூல் ஆகும். ஐந்திலக்கணமாவன: எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்பன. தொல்காப்பியம் ஐந்திலக்கணமாகக் கருதப்படுவதும் உண்டு என்பது, பேராசிரியர், 'யாப்பதிகாரம் எனச் செய்யுளியலைப் பிறர் கூறுவர்' என்று காட்டுதலாலும்', சேனாவரையர் 'உவமையியலை அணியியல்' எனச் சுட்டுதலாலும்[2] பெறப்படும். இவ் ஐந்திலக்கணத்துள் ஒரு பகுதியான பொருள் அகப் பொருள், புறப்பொருள் என இரண்டாகக் கொண்டால் ஆறு இலக்கணம்[3] என்று கூட கூறலாம். பிற்காலத்தில் வளர்ந்த பாட்டியலைச் செய்யுளின் ஒழிபு எனக் கொண்டு. செய்யுளிலக்கணம், பாட்டிய லிலக்கணம் என இரண்டாகப் பிரித்து, ஏழு இலக்கணம் என்று கொள்வது, பெரிதும் தவறாகிவிடாது. இன்று தமிழில் ஏழு இலக்கணங்களும் காணப்படுகின்றன. இவற்றின் வளர்ச்சி யைத் தனித்தனியாகக் காண்போம். தொல் காப்பியருக்கு மூன்று இலக்கணமாகக் கொள்வதே உடன்பாடு என்றும் ஐந்திலக்கணமும் உடன்பாடு அன்று என்றும் கூறுவர்.

## ஐந்திலக்கண நூல்கள்:

தொல்காப்பியம், வீரசோழியம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், சாமிநாதம் என்பன ஐந்திலக்கண நூல்களாகும். இவற்றுள் தொல்காப்பியதைத் ஐந்திலக்கணம் எனக் கூறுதல் மரபன்று. ஆயினும் ஐந்திலக்கணமும் இதன்கண் உண்டு. வீரசோழியம் பொருளை இரண்டு கூறாகக் கொண்டு அகப்பொருள் இலக்கணமும் புறப்பொருள் இலக்கணமும் உணர்த்துகின்றது. இலக்கண விளக்கம் அகப்பொருள், புறப்பொருள், பாட்டியல் இவற்றின் இலக்கணமும் கூறுகின்றது. தொன்னூல் விளக்கம், முத்துவீரியம் என்பன பாட்டியல் இலக்கணமும் கூறுகின்றன. சாமிநாதம் ஐந்திலக்கண நூல் என்பர் இந்நூல் முழுதும்

---

1. தொல், பொருள், செய்யுளியல் 1. உரை.
2. தொல். சொல். 440 உரை.
3. தண்டபாணி சுவாமிகள் இயற்றிய அறுவகையிலக்கணம் என்பது. வழக்காற்றிலுள்ள ஐந்திலக்கணங்களோடு புலமை இலக்கணம் என்று ஒன்றும் கூட்டிச் சொல்வது.

வெளிவரவில்லை. தமிழ் நெறி விளக்கம் என்னும் நூலும் ஐந்திலக்கண நூல் என்பர். இந்நூலில் அகப்பொருள் பகுதியே கிடைத்துள்ளது. பிற பகுதிகள் கிடைக்கவில்லை. நன்னூலும் ஐந்திலக்கண நூல் என்று கூறுவர். தண்டபாணி சுவாமிகள் இயற்றிய அறுவகை இலக்கணம் என்னும் நூலும் ஐந்திலக்கணம் உணர்த்துவது என்பர். இனி ஒவ்வோர் இலக்கணப் பிரிவு பற்றியும் காண்போம்.

## 1, 2. எழுத்தும் சொல்லும்:

தொல்காப்பியர் எழுத்தும் சொல்லும் ஆய்ந்தார்; பொருளும் ஆய்ந்தார். ஆனால் பின்வந்தோர் எழுத்தும் சொல்லுமே சிறப்பாகக் கருதத்தக்கன என எண்ணினர். இந்நிலையில் எழுத்தும் சொல்லும் பற்றி மட்டும் இலக்கணங்கள் தோன்றின. கி.பி. 12-ம் நூற்றாண்டளவில் எழுத்தும் சொல்லும் உணர்த்தும் நேமிநாதம் தோன்றியது. நன்னூல் கி.பி. 13-ம் நூற்றாண்டில் எழுந்தது. இந்நன்னூல் ஐந்திலக்கணமும் உணர்த்துவது எனக் கொண்டாலும், எழுத்தும் சொல்லுமே நிலைத்தன.

எழுத்தும் சொல்லும் இலக்கணமேயாயினும் சொல்லிலக்கணமே இலக்கணம் எனக் கருதினர். வடமொழி வாணர்கள் சொல்லிலக்கணத்தையே வியாகரணம் எனக் கொண்டனர். வீரசோழியம், நேமிநாதம், நன்னூல் ஆகிய இலக்கண நூல்கள் சொல்லிலக்கணத்தையே பெரிதும் ஆராய்ந்தன. கி.பி. 17-ம் நூற்றாண்டில் எழுந்த பிரயோக விவேகமும், இலக்கணக் கொத்தும் சொல்லிலக்கணம் பற்றியே விரிவாக விளக்கின.

எழுத்தும் சொல்லும் உணர்த்தும் நூல்கள் தொல்காப்பியம், வீரசோழியம் நேமிநாதம், நன்னூல், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், சாமிநாதம் என்பன.

## 3. அகப்பொருள் இலக்கணம்:

பொருளதிகாரம் கிடைக்காததால் எழுந்த இலக்கண நூலே இறையனார் களவியல் என அந்நூல் உரை கூறுகின்றது. இறையனார் களவியல் தோன்றிய காலத்தில் எழுத்தும் சொல்லும், யாப்பும் கிடைத்தன. பொருள் கிடைக்கவில்லை; ஆதலால் இறையனார் களவியல் காண வேண்டிய நிலைமை ஏற்பட்டது என அறிகிறோம். இக்காலத்தில் இலக்கணம்



எழுத்து, சொல், பொருள், யாப்பு என நான்கு வகையாக ஆராயப்பட்டது என்று தோன்றுகிறது. மேலும் பொருள் என்பது அகப்பொருளே என்பது நாம் அறியவேண்டும். பொருளதிகாரம் வல்லாரைக் காணோம் என்று வருந்தியவர்கள் இறையனார் களவியல் கண்டனம் என அகப்பொருள் இலக்கணத்தையே பொருளாகக் கருதினர். இறையனார் களவியல் தோன்றிய காலமுதலே அகப்பொருள் தனியாக வளரத் தொடங்கியது. கி.பி. 12-ம் நூற்றாண்டில் நம்பியகப் பொருள் தோன்றியது. இந்நூலுக்கு முற்பட்டது எனக் கருதப்படும் திருக்கோவையாரில் அகப்பொருள் துறைகள் அமைந்த சூத்திரங்களும், துறைகளை விளக்கும் கொளுக்களும் காணப்படுகின்றன. இவை, யாரால் இயற்றப்பட்டன என்று புலனாகவில்லை. பின்வந்த பழனிக் கோவையிலும் இவ்வமைப்பு காணப்படுகிறது. கி.பி. பதினாறாம் நூற்றாண்டில் மாறனகப் பொருள் தோன்றியது. கி.பி. 17-ம் நூற்றாண்டில் இயற்றப்பெற்ற இலக்கண விளக்கம், தொல்காப்பியத்தினையும் நம்பியகப் பொருளையும் பின்பற்றி அகப்பொருள் இலக்கணம் வகுக்கின்றது. முத்துவீரியம், தொன்னூல் விளக்கம் என்பனவும் அகப்பொருள் இலக்கணத் திணைக் கூறின. இறையனார் களவியலை ஒட்டிக் களவியற்காரிகை என்னும் நூலும் இயற்றப்பெற்றது. பரிமேலழகர் முதலியோருக்கு முற்பட்ட இந்நூல், அகப்பொருள் இலக்கணம் உணர்த்துகின்றது.

தொல்காப்பியர், அகப்பொருள் இலக்கணத்தினை வகுக்கும்போது, ஒவ்வொரு பாடலும் ஒன்றற்கொன்று தொடர் பின்றித் தனித்தனி நாடக பாத்திரங்களின் கூற்றாக அமைந்த நிலைக்கே இலக்கணம் கூறுகின்றார். இதனால் தொல்காப்பியத்தில் கூற்று உண்டேயன்றித் துறையில்லை என அறியலாம். பின் வந்தோர் நாடக பாத்திரம் பேசுதல்போல அமைந்த நிலையினின்றும் வேறுபட்டுத் துறைகளாகப் பகுத்து, ஒரு தொடர்கதை போல இலக்கணம் கண்டார்கள். இதனால் பல கோவை இலக்கியங்கள் தமிழுக்குக் கிடைத்தன.

அகப்பொருள் இலக்கணம் கூறும் நூல்கள்:- தொல்காப்பியம், இறையனார் களவியல், தமிழ்நெறிவிளக்கம், வீரசோழியம், நம்பியகப் பொருள், களவியற்காரிகை, மாறனகப் பொருள், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்து வீரியம், சாமிநாதம் என்பன. இவையன்றித் திருக்கோவையார், பழனிக்கோவை ஆகிய நூல்களில் உள்ள நூற்பாக்களும் அகப்பொருள் இலக்கணம் கூறுகின்றன.

## 4. புறப்பொருள் இலக்கணம்:

தொல்காப்பியம் புறத்திணையியல், புறப்பொருள்
இலக்கணம் பற்றிப் பேசுகின்றது. இதன்பின் பன்னிரு படலம்
எழுந்தது. பன்னிருபடலத்தின் வழிநூலாகப் புறப்பொருள்
வெண்பாமாலை கி.பி. 8-ம் நூற்றாண்டில் தோன்றியது.
இதன்பின் தனியாகப் புறப்பொருள் நூல்கள் தோன்றவில்லை
வீரசோழியம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம்
என்பன ஓரளவு புறப்பொருளைப் பற்றிய இலக்கணம்
கூறுகின்றன. வீரசோழிய உரைகாரர் மேற்கோளாகக்
காட்டும் புறப்பொருள் பற்றிய நூற்பாக்கள் தனி நூலைச்
சார்ந்தனவா? அவர் பாடியனவா? என்பது தெரியவில்லை.

புறப்பொருள் இலக்கணத்தைப் பொறுத்தமட்டில்
புறப்பொருள் வெண்பாமாலையே சிறப்புற்று விளங்குகின்றது.
வேறு புறப்பொள் இலக்கண நூல்கள் தோன்றாமைக்கு உரிய
காரணம் விளங்கவில்லை. ஒரு வேளை, காதல் பாடல்களும்.
ஆன்மீக இலக்கியங்களும் போதும் என நினைத்தார்களோ,
என்னவோ? அறியோம். புறப்பொருள் இலக்கியங்களும்
மிகுதியாகத் தோன்றவில்லை என்பதனை இங்கு நாம்
சிந்தித்தல் வேண்டும். பொதுவாக மனிதனை விலங்காகவும்
மனித இதயத்தைக் கல்லாகவும் ஆக்கக்கூடிய போர்
முறைகளில் கவிஞர்களுடைய உள்ளம் ஈடுபடாமல்
போயிருக்கலாம்.

## 5. யாப்பிலக்கணம்

தொல்காப்பியம் செய்யுளியல் மிக விரிவுடையது. இவர்
காலத்திலேயே பலர் யாப்புப் பற்றித் தனியாக ஆராய்ந்திருக்க
வேண்டும். தொல்காப்பியர் பல இடங்களில் 'யாப்பறி புலவர்'
எனச் சுட்டுதல் இதற்குச் சான்றாகும். தொல்காப்பியரோடு
ஒருசாலை மாணவர் எனக் கூறும் காக்கைபாடினியார்
யாப்பிலக்கணம் செய்ததாக அறிகிறோம். காக்கைபாடினியார்
என்னும் பெயருடையார் இருவர், சிறுகாக்கைபாடினியம்,
பெருங்காக்கைபாடினியம் என்னும் இரண்டு நூல்கள்
இயற்றினர். இவர்கள் பல்லவர் காலத்தினர் என்பர். கி.பி. 10-ம்
நூற்றாண்டில் யாப்பருங்கலமும், யாப்பருங்கலக் காரிகையும்
தோன்றின. இந்நூலுரைகளால் பல யாப்பிலக்கண நூல்களை
அறிகிறோம். அவற்றை நூலின் இறுதியில் உள்ள பட்டியலில்
காண்க.



பாவிற்கு இலக்கணம் கூறுதற்குப் பதிலாக அப்பாவின்
வகைகளுக்கு எடுத்துக் காட்டும் விளக்கமும் அளிக்கச் சில
நூல்கள் தோன்றின. மாறன் பாப்பாவினம்[1] சிதம்பரச் செய்யுட்
கோவை,[2] பல்சந்தப் பரிமளம்,[3] திருவலங்கற்றிரட்டு[4] என்பன
இத்தகைய நூல்கள். விருத்தப்பாவியல் என்ற நூல், சென்ற
நூற்றாண்டின் இறுதியில் வெளிவந்தது. இது வசனத்தில்,
விருத்தத்தை வடமொழி மரபுபற்றி ஆராயத் தொடங்கியது.
வண்ணங்களின் இலக்கணம் கூறும் நூலினைத் தண்டபாணி
சுவாமிகள் 'வண்ணத்தியல்பு' என்னும் பெயருடன் செய்தார்.
இந்நூல் கி.பி. 19-ம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது.

செய்யுள் இலக்கணம் கூறும் நூல்கள்: - தொல்காப்பியம்,
யாப்பருங்கலம், காரிகை, வீரசோழியம், பாப்பாவினம்,
சிதம்பரச் செய்யுட்கோவை, சிதம்பரப் பாட்டியல், இலக்கண
விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம்,
திருவலங்கற்றிரட்டு, பல்சந்தப்பரிமளம், விருத்தப்பாவியல்,
வண்ணத்தியல்பு முதலியன.

## 6. அணியிலக்கணம்

தொல்காப்பியர் உவம இயலில் உவமைக்கே முதலிடம்
கொடுத்தார். இவ்வுவமையின் வேறுபாடுகளே ஏனைய
அணிகள் என்பது அவர் கருத்து. பிற்காலத்தில் அணியிலக்கண
ஆராய்ச்சி விரிந்தது. வடமொழியின் பயனால், இவ்
வாராய்ச்சி பரந்து பட்டது. வடமொழிக் காவ்யாதர்சத்தை
அடியொற்றித் தமிழில் தண்டியாசிரியர் அணிநூல்
செய்தார். அவருக்குமுன் அணியியல் என்னும் பெயரால்
நூல் ஒன்றும் இருந்தது. வீரசோழிய ஆசிரியர் 35 அணிகள்
பற்றி விளக்குகின்றார். தண்டியலங்காரமும் 35 அணிகள் பற்றிக்
கூறுகின்றது. ஆனால் வீர சோழியமும் தண்டியலங்காரமும்
கூறும் அணிகளில், சில வேறுபாடுகள் உள்ளன. இலக்கண
விளக்க நூலாசிரியர், தண்டியாசிரியரைப் பின்பற்றி 35
அணிகளே கொண்டார். மாறனலங்காரம் 64 அணிகளைப்
பற்றிக் கூறுகின்றது. வடமொழிச் சந்திராலோகத்தையும்
அதன் உரையான குவலயானந்தத்தையும் கி.பி. 19-ம் நூற்றாண்

1. திருக்குருகைப் பெருமாள் கவிராயர் இயற்றியது.
2. குமரகுருபரர் இயற்றியது.
3. பாம்பன் சுவாமிகள் இயற்றியது.
4. இராமலிங்க அடிகள் இயற்றியது.

டில் தமிழில் மொழி பெயர்த்தனர். இவை 100 அணிகள் பற்றிப் பேசுகின்றன. முத்துவீரியம் 58 அணிகள் பற்றிக் கூறுகின்றது.

அணியிலக்கணம் கூறும் நூல்கள்:- தொல்காப்பியம், வீரசோழியம், தண்டியலங்காரம், மாறனலங்காரம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், சந்திராலோகம், குவலயானந்தம் என்பன.

**7. பாட்டியல் :**

யாப்பிலக்கணத்துள் பாட்டியல் அடங்கும். இப்பாட்டியல் ஆராய்ச்சியினை யாப்பின் ஒழிபியல் என்று கூடக் கூறலாம். இவ்வாராய்ச்சியினை இரண்டு கூறாகப் பகுத்து விளக்கம் கண்டனர். முதற்பகுதியில் பாட்டுக்கும் பாடப்படுவோனுக்கும் உரிய பத்துப் பொருத்தங்கள் ஆராயப் பெறும். இப்பொருத்தங்கள் சோதிட நூலார் கூறும் மணப் பொருத்தங்கள்போல இலக்கண நூலால் கூறும் இலக்கியப் பொருத்தங்களாகும். அவை : மங்கலம், சொல், எழுத்து, தானம், பால், உணவு, வருணம், நாள், கதி, கணம் என்னும் பொருத்தங்கள். இவற்றோடு நாழிகைப் பொருத்தம், பெயர்ப்பொருத்தம் புட்பொருத்தம் என்பனவற்றையும் சிலர் சேர்த்துக் கூறுவர். இப்பொருத்தங்கள் பாட்டுக்கும் பாடப்படுவோனுக்கும் உரியது என்பதனை,

> 'விரித்த பாமகட்கும் வேட்கும் இறைக்கும்
> பொருத்தம் ஈரைந்து போற்றல் வேண்டும்.'

என்பதனால் உணரலாம். இப்பொருத்தங்கள் ஒன்றப் பாடினால் பாடப்பெறுவோர் நன்மையடைவர். இன்றேல் அவர்கள் செல்வம் இழப்பர்; நோய் அடைவர்; சுற்றத் தொடர்பு நீங்குவர்; இறப்பும் எய்துவர். அவர்களுக்குச் சந்ததி ஏற்படாது. கடவுளைப் பாடும் போது பொருத்தங்கள் இல்லாமல் பாடினால், பாடுவோர் துன்பம் அடைவர் எனப் பாட்டியல் நூல்கள்' பகர்கின்றன.

---

1. *தொகைக்குற்றம் பாட்டுறில் செல்வம்போம் நோயாம்*
   *சுற்றமறும் மரணமுறும் சோரும் காலும்*
   *சகத்தவர்க்கு ஈதன்றியே தேவர்க் காகில்*
   *தப்பாதிப்பலன் கவிதை சாற்றி னார்க்கே*

   *- சிதம்பரப் பாட்டியல்*



## பொருத்தங்களின் வீழ்ச்சி:

பத்துப் பொருத்தங்களுள் மங்கலப் பொருத்தம், சொற் பொருத்தம் என்னும் இரண்டும் சொல் நோக்கியன. கணப் பொருத்தம் சீர்நோக்கியது; ஏனைய பொருத்தங்கள் எழுத்து நோக்கியன. இப்பொருத்தங்களைப்பற்றித் தொல்காப்பியர் ஏதும் கூறவில்லை. வெண்பாப்பாட்டியல் தோன்றிய கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டிற்குச் சற்று முன்பே இம்முறை ஏற்படத் தொடங்கியிருத்தல் வேண்டும். யாப்பருங்கல விருத்தியில், ஆனந்தக் குற்றம் என்பது அறுவகைப்படும் என விளக்கப்பட்டுள்ளது. இதனால் கி.பி. பத்தாம் நூற்றாண்டிற்கு முன்னரே இவ்வாராய்ச்சி தோன்றி விட்டது என்னலாம். இக்கொள்கை வடநூல் மரபினைத் தழுவி எழுந்தது என்பர். இக்கொள்கையினைப் பேராசிரியர், நச்சினார்க்கினியர் முதலிய உரையாசிரியர்கள் ஏற்கவில்லை. அவர்களுக்கு இக்கொள்கை உடன்பாடும் அன்று. நச்சினார்க்கினியர், பத்துப் பாட்டுரையில், 'நூற்குற்றம் கூறுகின்ற பத்து வகைக் குற்றத்தே, தன்னான் ஒரு பொருள் கருதிக் கூறல் என்னும் குற்றத்தைப் பின்னுள்ளோர், ஆனந்தக் குற்றம் என்பதோர் குற்றம் என்று நூல் செய்ததன்றி, அகத்தியனாரும், தொல்காப்பியனாரும் இக்குற்றம் கூறாமையில், சான்றோர் செய்யுட்கு இக்குற்றம் உண்டாயினும் கொள்ளார் என மறுக்க' என்பர்.[1] பேராசிரியர், இம்மரபினைப் பிற்காலத்துத் தோன்றிய வழக்கு எனச்சொல்லி பாட்டியல் மரபு என்னும் நூலினை எடுத்துக் காட்டி, இந்நூல் நின்று பயனின்மை என்னும் குற்றத்திற்கு, மேற்கோளாக அமைவது என்பர்.[2] இவற்றால் பொருத்தம், குற்றம் முதலிய வேண்டாத அமைப்புக்களை அக்காலத்திலேயே அறிஞர்கள் எதிர்த்தனர் என்பது போதரும். இக்காலத்தில் இம்மரபு முற்றிலும் அழிந்து விட்டது என்று கூடக் கூறலாம்.

## பாட்டில் சாதி:

மனித குலத்தில் சாதிப்பிரிவினையைப் பார்த்தவர்கள், பாவகையிலும் சாதியை நாட்டத் தயங்கவில்லை. இன்ன குலத்தவரை இன்ன பாவினால்தான் பாடவேண்டும் என வரையறுத்தனர். வேதியன், வேந்தன், வணிகன், வேளாளன் என்ற நான்கு குலங்களையும் முறையே வெண்பா, அகவல், கலி,

---

1. பத்துப்பாட்டு, மலைபடு கடாம். வரி. 145. உரை.
2. தொல்காப்பியம், மரபியல், நூற்பா 108. உரை.

பாக்களாலும் பாடவேண்டும் வஞ்சி என்ற நான்கு வகைப்பாக்களாலும் பாடவேண்டும் என்று கூறினர். 'சாதிகள் இல்லையடி பாப்பா' என மனித சாதியையே தகர்த்தெறியும் போது, பாட்டுச் சாதி எவ்வளவு நாள் நிலைத்து நிற்கும்? அழிந்தொழிந்தது நகைப்புக்கு இடனாகியது.

## பிரபந்த இலக்கணம்:

பொருத்தங்கள் அல்லாத மற்றொரு வகைப் பிரிவு, பிரபந்தங்களின் அமைப்பினைப் பற்றிக் கூறுவதாகும். தொல்காப்பியர், ஓரளவு குறிப்பாகச் சுட்டிச் சென்ற இலக்கியப் பாகுபாடுகளைக் கால வளர்ச்சியில் விரித்துக் கூற வேண்டிய நிலை ஏற்பட்டது. இப்பணியில் பாட்டியல் நூல்கள் ஈடுபட்டன. இதுவே பாட்டியல் ஆராய்ச்சி (பாட்டு = பிரபந்தம்) என்னும் உண்மையை நிலைநாட்டும் பகுதியாகும். இப்பகுதியில் இலக்கியங்கள் அமையும் முறையினையும், அதனால் அவ்விலக்கியம் பெறும் பெயரினையும் பற்றிய விளக்கங்களைக் காண்கிறோம். பண்டைக் காலத்தில் அகப் பொருள் துறைகளாகவும், புறப்பொருள் துறைகளாகவும் கருதப்பட்ட பகுதிகள், இங்கு இலக்கியமாக உருவெடுத் துள்ளன. சான்றாகக் கைக்கிளை, வாயுறை வாழ்த்து, விளக்கு நிலை முதலிய இலக்கியங்களைக் கூறலாம். பாட்டியல் நூல்கள் இப்பகுதியில், இலக்கிய அமைப்பினை ஆராய்ந்தன.

தொல்காப்பியர் காலத்தில், 42, செய்யுள் வகைகள் இருந்தன. அவர் காலத்தில் பரந்துபட்ட அளவில் பல்வேறு வகைத் தனி இலக்கியங்கள் இல்லை. ஆயினும், அத்தகைய இலக்கியங்கள் காலப்போக்கில் தோன்றுதல் கூடும் என்பதனை அறிந்தே விருந்து என்னும் வனப்பினை அமைத்துள்ளார். பிற்காலத்தில் பல புதிய இலக்கிய வகைகள் பழமையின் அடிப்படையில் தோன்றின. இதற்கு ஏற்பப் பாட்டியல் நூல்கள், அதன் அமைப்பையும் ஒழுங்கையும் ஆராய முற்பட்டன.

## பாட்டியல் நூல்கள்:

இன்று நமக்குக் கிடைத்திருக்கும் பாட்டியல் நூல்கள் :- பன்னிரு பாட்டியல், வெண்பாப் பாட்டியல், நவநீதப் பாட்டியல், சிதம்பரப் பாட்டியல், வரையறுத்த பாட்டியல், இலக்கண விளக்கத்துள் அமைந்த இலக்கண விளக்கப் பாட்டியல் என்பன. மேலும் முத்துவீரியத்துள்ளும், தொன்னூல் விளக்கத்திலும் பாட்டியலைக் காண்கிறோம். பிரபந்ததீபிகை என்னும் நூலும் பாட்டியலே ஆகும். இவையன்றி வாருணப் பாட்டியல், தத்தாத்திரேயப் பாட்டியல், பண்டாரப்பாட்டியல், அகத்தியர் பாட்டியல், மாமூலர் பாட்டியல், பாட்டியல் மரபு, பிரபந்ததீபம், பிரபந்தத்திரட்டு முதலிய நூல்கள் பற்றியும் சில சில குறிப்புக்கள் கிடைத்துள்ளன. பன்னிரு பாட்டியல் முதலிய நூல்கள் பற்றிய செய்திகளை, அவ்வந் நூல் பற்றிய தலைப்பில் காண்க. அங்கு ஒவ்வொரு நூலின் சிறப்பியல்புகளையும், அமைப்பு முறைகளையும் குறித்துள்ளேன்.

1. நவநீதப்பாட்டியல், பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை, பக்கம். 119-120



## பாட்டியல் கூறும் பிரபந்தங்கள் :

பன்னிரு பாட்டியலில் 65 இலக்கியங்களைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. கி.பி. 12-ம் நூற்றாண்டில் எழுந்த வெண்பாப் பாட்டியலில் 56 இலக்கியங்களைப் பற்றிய இலக்கணம் உள்ளது.

கி.பி. 14-ம் நூற்றாண்டில் தோன்றிய நவநீதப் பாட்டியலில் ஏறத்தாழ 97 இலக்கிய வகை பற்றிய விளக்கம் அமைந்துள்ளது. இவற்றை நோக்கும் போது, கி.பி. 14-ம் நூற்றாண்டு வரை இலக்கிய வகையில் வரையறை எதுவும் ஏற்படவில்லை என்பது புலனாகின்றது. இலக்கிய உலகில் காணப்பட்ட இலக்கியங்களுக்கு எல்லாம் பாட்டியல் ஆசிரியர்கள் இலக்கணம் அமைத்தனர். கி.பி. 17-ம் நூற்றாண்டில் ஒருவாறு இவ் இலக்கியங்களுக்கு வரையறை ஏற்பட்டது என்று நினைக்க இடமுண்டு. கி.பி. 1635-ல் வாழ்ந்த வனாகக் கருதப்படும் சிவந்தெழுந்த பல்லவராயன் மீது பாடப் பெற்ற உலாவில்,

'தொண்ணூற்றாறு
கோலப்ர பந்தங்கள் கொண்டபிரான்'

என்று கூறப்பட்டுள்ளது. இதனால் கி.பி. 17-ம் நூற்றாண்டில் இலக்கியங்களைத் தொண்ணூற்றாறு வகையாகப் பிரித்துக் காணும் மரபு ஏற்பட்டது என அறியலாம். கி.பி. 1732-ல் வீரமா முனிவரால் இயற்றப்பெற்ற தொன்னூல் விளக்கத்திலும் சதுரகராதியிலும் 96 பிரபந்த வகைகள் காணப்படுகின்றன. இவ்வகராதிக்கு முற்பட்டது எனக் கூறும் பிரபந்த மரபியல் என்னும் நூலில்,

'பிள்ளைக் கவிமுதல் புராண மீறாத்
தொண்ணூற் றாறுஎனும் தொகையதாம்'

என்று 96 வகைப் பிரபந்தங்கள் குறிக்கப்பட்டுள்ளன. ஆனால் கி.பி. 17-ம் நூற்றாண்டில் எழுந்த இலக்கண விளக்கப் பட்டியலிலும் கி.பி. 16-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் எழுந்த சிதம்பரப் பாட்டியலிலும் 96 என்ற வரையறை காணப்பட வில்லை. இலக்கண விளக்கப் பாட்டியல் 68 இலக்கியப் பிரிவுக ளையும், சிதம்பரப் பாட்டியல் 62 இலக்கியப் பிரிவுகளையும் குறிப்பிடுகின்றன. பிரபந்த தீபிகையில் 97 பிரபந்தங்கள் குறிக்கப்பெற்றுள்ளன. இவற்றையெல்லாம் நோக்கும்போது, கி.பி. 14-ம் நூற்றாண்டு வரை 96 இலக்கியம் என்ற வரையறை ஏற்படவில்லை என்பதும், கி.பி. 17-ம் நூற்றாண்டில் சிவந்தெழுந்த பல்லவராயன் காலத்தில் 96 என்ற பகுப்பு ஏற்பட்டது என்பதும் இவ்வரையறையைச் சிலர் தழுவினர். சிலர் தழுவவில்லை என்பதும் புலனாம். மேலும் 96 வகைப் பிரபந்தங்களுக்கும் அடங்காமல் அம்மானை, அலங்காரம், வண்ணம், வில்பாட்டு, புலம்பல், தென்பாங்கு, சிந்து, சிட்டுக் கவி என்பன ஆதியாக எண்பதுக்கு மேற்பட்ட புதிய இலக்கியங்கள் உள்ளன. இதனை நோக்கும்போது வளர்ந்து வரும் சமுதாயத்தில் இலக்கிய ஆக்கம் இவ்வளவுதான் என்று அறுதியிட்டுக் கூறமுடியாது என்பது விளங்கும்.

இதுகாறும், தமிழ் இலக்கணம் ஏழுவகைப் பிரிவு அடைந்த தனையும் அதன் வளர்ச்சியையும் கண்டோம். இனி, ஒவ்வொரு தமிழ் இலக்கண நூல் பற்றியும் பார்ப்போம்.

2

# அகத்தியம்

அகத்தியரைப் பற்றியும் அகத்தியத்தைப் பற்றியும் இறையனார் களவியலுரை கூறுகின்து. இவ்வுரை, அகத்தியம் தலைச்சங்கத்திலும் இடைச்சங்கத்திலும் இலக்கண நூலாக இலங்கிற்று எனவும் இயம்புகின்றது.

அகத்தியரைப் பற்றிய குறிப்புக்கள் சங்க இலக்கியங்களில் வெளிப்படையாகக் காணப்படவில்லை. பரிபாடலில் உள்ள 'பொதியின் முனிவன்' என்னும் தொடருக்கு, 'அகத்தியன் என்று ஓர் நட்சத்திரம்' என்று உரை வரைந்துள்ளார் பரிமேலழகர். மதுரைக் காஞ்சியில், 'தென்னவற் பெயரிய துன்னருந் துப்பின், தொன்முது கடவுள்' என்னும் பகுதியில், தொன்முது கடவுள்' எனவரும் தொடருக்கு, 'தொன்முது கடவுள் என்பது அகத்தியரைக் குறிக்கும்' என நச்சினார்க்கினியர் உரை கூறியுள்ளார். இவ்விரண்டு இடங் களும், உரையாசிரியர்கள், அகத்தியரைப் புகுத்திக் கூறிய இடங்களே ஆகும். சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அகத்தியரைப் பற்றிய குறிப்புக்கள் உள்ளன.

## அகத்தியரின் மாணவர்:

அகத்தியரிடம் பயின்ற மாணவர் பன்னிருவர் என்பர். அவர்களாவார்:- தொல்காப்பியன், அதங்கோட்டாசான், துராலிங்கன், செம்பூட்சேய், வையாபிகன், வாய்ப்பியன், பனம்பாரனார், கழாரம்பர், அவிநயன், காக்கைபாடினி, நற்றத்தன், வாமனன் என்பவர். இம்மாணவர் பன்னிருவரும் பன்னிருபடலம் என்னும் புறப்பொருள் இலக்கண நூல் செய்தனர் என்றும் இந்நூலின் வழிவந்ததே புறப்பொருள் வெண்பாமாலை என்றும் வெண்பாமாலையின் சிறப்புப் பாயிரம் கூறுகின்றது. இதனால் பன்னிருபடல ஆசிரியர்களுள் தொல்காப்பியரும் ஒருவர் என அறிகிறோம். ஆனால், இளம்பூரணர் காலத்தில் பன்னிரு படலத்தில் வெட்சிப் படலம் தொல்காப்பியர் செய்ததன்று என்ற கொள்கை நிலவியது. இளம்பூரணரும் இக்கொள்கையினரே.

## அகத்தியரும் தொல்காப்பியரும்:

அகத்தியர் மாணவர் பன்னிருவருள், தொல்காப்பியரே தலைமை வாய்ந்தவர் எனக் கருதினர்.

'ஆனாப் பெருமை அகத்தியன் என்னும்
அருந்தவ முனிவன் ஆக்கிய முதனூல்
பொருந்தக் கற்றுப் புரைதப உணர்ந்தோர்
நல்லிசை நிறுத்த தொல்காப் பியன்'

என்பது பன்னிருபடலப் பாயிரச் செய்யுள் எனக் கருதும் பகுதி.

'தென்மலை இருந்த சீர்சால் முனிவரன்
தன்பால் தண்டமிழ் தாவின் றுணர்ந்த
துன்னருஞ் சீர்த்தித் தொல்காப் பியன்'

என்பது வெண்பாமாலையின் சிறப்புப் பாயிரம். இவ்விரண்டும், தொல்காப்பியர் அகத்தியரின் மாணவர் என்பதனைக் காட்டும். தொல்காப்பியரோடு ஒருங்குகற்ற பனம் பாரனார், தாம்பாடிய தொல்காப்பியச் சிறப்புப் பாயிரத்தில், அகத்தியனாரைப் பற்றியும் அவரது மாணவர் தொல்காப்பியர் என்பது பற்றியும் ஏதும் குறிக்கவில்லை. பனம்பாரனார் அகத்தியர் மாணவருள் ஒருவரும் கூட. இவ்வாறிருந்தும், இவர் அகத்தியரைப் பற்றிக் கூறாதது வியப்பே. ஆனால் நச்சினார்க்கினியர், பாயிரத்தில் வரும்



'அதங்கோட்டாசாற்கு அரில் தபத் தெரிந்து' என்னும் தொடரினைக் கொண்டு அகத்தியரையும் தொல்காப்பியரையும் இணைத்துக் கதையொன்று காட்டுகின்றார். இக்கதை, தொல்காப்பியத்தின் பெருமை காட்டக் கட்டப்பட்டதேயாயினும் உண்மையில் தொல்காப்பியத்தின் பெருமை கூறுவதாக இல்லை. ஆசிரியரும் மாணவரும் ஒருவர்க்கு ஒருவர் சபித்துக் கொண்ட போராட்ட நிலையே இக்கதையில் புலனாகின்றது. இக்கதையினை ஆதாரமுடையது என்று ஏற்றுக்கொள்ளுதல் இயலாது. இக்கதையின் தோற்றம்பற்றிப் பின் வருமாறு அறிஞர் க. வெள்ளை வாரணனார் கூறுவர்.

தொல்காப்பியனாரை அகத்தியர்க்கு மாணவர் எனக் கொள்வாரை, 'நான்கு வருணத் தொடுபட்ட சான்றோர்' எனவும், மாணவர் அல்லர் எனக் கூறுவாரை, 'வேத வழக்கொடு மாறுகொள்வார்' எனவும் பேராசிரியர் குறித்துள்ளார். இதனால் பேராசிரியர் காலத்தில், அகத்தியர்க்கு மாணவர் தொல்காப்பியர் என்னும் கதையினை உடன்படுவாரும் மறுப்பாரும் என இருதிறத்தார் இருந்தமை புலனாம். தொல்காப்பியனார் அகத்தியருக்கு மாணவரல்லர் என்னும் கொள்கையினர், தம் காலத்தில் வழங்கிய அகத்தியச் சூத்திரங்களுக்கும், தொல்காப்பியத்திற்கும் உள்ள முரண்பாடுகளைச் சான்றாகக் காட்டியிருத்தல் வேண்டும். இந்நிலையில் அகத்தியர் மாணவர் தொல்காப்பியர் என்னும் கொள்கையுடையோர், அகத்தியர்க்கு மாணவராகத் தம்மால் சொல்லப்படும் தொல்காப்பியனார், அகத்தியத்திற்கு மாறுபட நூல் செய்வதற்கு உரிய காரணத்தினைப் படைத்துரைக்க வேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டது. இந்நிலையில் புனைந்து வழங்கப் பெற்ற கதையே, தொல்காப்பியச் சிறப்புப் பாயிரவுரையில் நச்சினார்க்கினியரால் எடுத்துக்காட்டப் பெற்றதாகும்.[1]

இவற்றை நோக்கும்போது, 'அகத்தியர் மாணவர் பன்னிருவர்; அவருள் தொல்காப்பியர் சிறந்தவர்; தொல்காப்பியத்திற்கு முதனூல் அகத்தியம்' என்னும் பெருங்கதை பலநூற்றாண்டுகளாகவே வழக்காற்றில் வந்துவிட்டது என்பது புலனாகும்.

1. தமிழ் இலக்கிய வரலாறு, தொல்காப்பியம், பக்கம் 46.

## அகத்தியரைப்பற்றி:

தமிழ் உலகில் அகத்தியரைப்பற்றிய பல குறிப்புக்கள் காணப்படுகின்றன. இலக்கியம், இலக்கணம், மருத்துவம், சோதிடம் முதலிய அத்தனை துறைகளிலும் அகத்தியர் இடம் பெறுகின்றார். வடநாட்டிலும் தென்னாட்டிலும் அகத்தியர் என்ற பெயருடன் பலர், பலகாலங்களில் வாழ்ந்தனர். ஒவ்வொரு சமயத்தோடும் அகத்தியர் தொடர்புற்ற வரலாறுகளைக் காண்கிறோம். சிவபெருமானிடத்தில் தமிழ் கற்ற அகத்தியர் ஒருவர்; முருகப் பெருமானிடத்தில் தமிழ் கற்றார் என்றும் கூறுவர். போதிசத்துவராகிய அவலோகி தரிடத்தில் தமிழ் கற்ற அகத்தியர் மற்றொருவர். கண்ணனொடு தொடர்பு கொண்ட அகத்தியர் வேறொருவர். இவரைச் சைனர்கள் போற்றுவர். சித்தர்களில் ஒருவராகத் திகழ்ந்த அகத்தியர் பிறிதொருவர். அகத்தியர் பற்றிய குழப்பம் வரலாற்று உலகில் பெருங் கலக்கம் என்பதனை இலக்கிய வரலாறு கற்றார் நன்கு அறிவர். அகத்தியர் இருந்ததில்லை என ஒரு சாராரும், தொல்காப்பியர்க்கு முன் அகத்தியர் ஒருவர் இருந்தார்; அவர் செய்ததே அகத்தியம் என மற்றொரு சாராரும் கூறுவர். அகத்தியர் இயற்றியனவாகக் கூறப்படும் நூல்கள் கூறும் குறிப்புக்கள் கொண்டும் வரலாற்றுக் கண்ணோடு கற்பனை யுலகில் பறக்காமல் அகத்தியரைப் பற்றி ஆராயவேண்டும்.

## அகத்தியம் :

அகத்தியம் தொல்காப்பியத்தின் முதனூல். முத்தமிழுக்கும் இலக்கணம் கூறுவது. 12,000 நூற்பாக்கள் கொண்டது என்பர். அகத்தியம் தொல்காப்பியத்தின் முதனூலாயின் சிறப்புப் பாயிரம் கட்டாயம் குறித்திருக்கும். இப்பாயிரம் குறிக்காத செய்தியைப் பின்வந்தோர் எங்குத் தேடிக் கண்டனரோ அறியோம்.

அகத்தியர் பெயரால் சிலசில நூற்பாக்களை இளம் பூரணர், மயிலைநாதர் முதலிய உரையாசிரியர்கள் காட்டுகின்றனர். பேரகத்தியத் திரட்டு என்னும் நூலொன்றும் வெளிவந்துள்ளது. சிற்றகத்தியம் என ஒரு நூலும் செய்தார் என்று கூறுவர். சிற்றகத்தியம் என்பது பேரகத்தியம் கண்டு



கட்டிவிட்ட கதை போலும். இன்று உரையாசிரியர்களும் அகத்தியத் திரட்டும் காட்டும் அகத்திய நூற்பாக்கள், தலைச்சங்க அகத்தியர் செய்தன என்று கூற முடியாது. பிற்காலத்தில் அகத்தியர் பெயர் கொண்ட யாரோ ஒருவர் செய்திருத்தல் வேண்டும். ஒருவேளை அகத்தியர் பாட்டியல் ஆசிரியராகிய அகத்தியர் செய்தனவாகவும் இருத்தல் கூடும். அடியார்க்கு நல்லார், 'நாடகத் தமிழ் நூலாகிய பரதம், அகத்தியம், முதலாகவுள்ள தொன்னூல்களும் இறந்தன' என்று கூறியுள்ளார். இதனால் அடியார்க்கு நல்லார் காலத்துக்கு முன், அகத்தியம், வழக்கிறந்தது என்பது பெறப்படும். இவ்வழக்கிறந்த அகத்தியமே தலைச்சங்க அகத்தியமாக இருத்தல் வேண்டும். தொல்காப்பியம் இயற்றமிழ் இலக்கணமும், இசை நுணுக்கம் இசைத் தமிழ் இலக்கணமும், பரதம் நாடகத்தமிழ் இலக்கணமும் பற்றித் தனித்தனியே விரித்துக் கூறியதனால், முத்தமிழ் இலக்கண மான அகத்தியம் வழக்கிறந்து விட்டது போலும் என்பர்.

3

# தொல்காப்பியம்*

காலப் பழமையாலும் புலவர் பாராட்டும் சீர்மையாலும் ஒப்பு உயர்வற்று விளங்குவது தொல்காப்பியம் என்னும் பெரு நூலாகும். இந்நூலே தமிழரின் நாகரிகச் சிறப்பிற்கும் தமிழின் பெருமைக்கும் எடுத்துக் காட்டாய் இலங்குகின்றது. கால வெள்ளத்தைக் கடந்து இன்று நமக்குக் கிடைத்திருக்கும் இந்நூல் இலக்கண நூல் என்பதை எண்ணும்போது, இந்நூலுக்கு முன் எத்துணையோ இலக்கிய இலக்கண நூல்கள் தோன்றிச் சிறப் புற்றிருக்க வேண்டும் என இறுமாப்புக் கொள்கின்றோம். ஆயின் தமிழர்தம் தவக் குறைவால் அந்நூல்கள் தமிழ் உலகிற்குக் கிடைக்கப் பெறவில்லை. எனினும் தொல்காப்பியத்தைக் கொண்டு நம் இலக்கியப் பெருமையையும், முன்னோர் வாழ்ந்த வளமார் நிலையினையும் எடுத்துக் காட்டுகிறோம்.

* தொல்காப்பியரால் இயற்றப்பெற்றநூல் தொல்காப்பியம் ஆதலால் தொல்காப்பியம் என்னும் பெயர் ஆகு பெயர் என்பர்; சிலர் தொல்காப்பியம் என்பது பிழைபட்ட பிற்கால வழக்கென்றும் தொல்காப்பியர் என்பதே நூலின் பெயர் என்றும் கூறுவர்.



## தொல்காப்பியர் வாழ்வும் வரலாறும்:

பெயர்க்காரணம்: தொல்காப்பியத்தை இயற்றியவர் தொல்காப்பியர் ஆவார். இப்பெயர் இவரது இயற்பெயர் என்பர். உரையாசிரியர்கள் தொல்காப்பியன் என்பதற்குப் பழமையான காப்பியக் குடியில் பிறந்தவன் எனப்பொருள் கூறியுள்ளனர். தொல்காப்பியர் காவ்ய கோத்திரத்தில் பிறந்தவராதலால் அடைமொழியுடன் தொல்காப்பியர் எனப் பெயர் பெற்றார் என்றும், காவ்ய குலத்தில் பிறந்தவராதலால் தொல்காப்பியர் என்று பெயர் பெற்றார் என்றும் கூறுவர்.[1] இக்கருத்துக்கள் ஏற்கத் தக்கன அல்ல என்பதைத் தமிழ் இலக்கிய வரலாற்றில்[2] கண்டு கொள்க. தொல்காப்பியரைப் பற்றிய கதையொன்றினைத் தொல்காப்பிய எழுத்ததிகாரப் பாயிர உரையில் நச்சினார்க்கினியர் குறித்துள்ளார். இக்கதையில் தொல்காப்பியரது இயற்பெயர் திரண தூமாக்கினி என்றும், அவர் தந்தையார் பெயர் ஜமதக்கினி என்றும் காணப்படுகின்றன. இக்கதையில் பல ஐயங்கள் இருப்பதால் இக்கதையினை ஆராய்ச்சியாளர் ஏற்றுக் கொள்வதற்கு இல்லை.

## அகத்தியர் மாணவர்:

அகத்தியர் மாணவர் பன்னிருவருள் தொல்காப்பியரும் ஒருவர் என்பது முன்பே கூறப்பட்டது. இப்பன்னிருவருள் ஒருவராகிய பனம்பாரனாரே தொல்காப்பியத்திற்குப் பாயிரம் செய்தவராவார். தொல்காப்பியர், தொல்காப்பியம் செய்தது மட்டுமன்றிப் பன்னிரு படலத்தில் உள்ள வெட்சிப் படலத் தையும் செய்தார் என்பர். இளம்பூரணர், பன்னிருபடலத்துள் வெட்சிப் படலம் தொல்காப்பியர் செய்ததன்று என்று காரணம் காட்டி மறுத்துள்ளார்.[3] ஆனால் சிவஞான முனிவர், வெட்சிப் படலம் தொல்காப்பியர் செய்ததே எனத் தம் தொல்காப்பியச் சூத்திரவிருத்தியில் கூறியுள்ளார்.[4]

1. மு. இராகவையங்கார், தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி, பக்கம் - 1.
   ரா. இராகவையங்கார், தமிழ் வரலாறு, பக்கம் - 259.
2. க. வெள்ளைவாரணன், தமிழ் இலக்கிய வரலாறு, பக்கம் 19-21.
3. தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல் 2. உரை.
4. பாயிரவிருத்தி, பக்கம் - 9.

## பிறப்பிடம் :

தொல்காப்பியப் பாயிரத்தில் பனம்பாரனாரா 'அதங்கோட்டாசான்' என ஓர் ஆசிரியர் குறிக்கப்படுகின்றா அதங்கோட்டாசான் என்னும் இப்பெயரை நோக்கும்போ அவர் திருவிதாங் கோட்டைச் சேர்ந்தவர் என்று தெரிகிற தொல்காப்பியர் பனி, மழை, வெயில் ஆகியவற்றிற்குக் கூறு இலக்கண விதிகள் தமிழ் நாட்டில் ஓரிடத்திலும் காண பெறவில்லை. ஆனால் மலையாள மொழியில் இவ்விதிகளுக் வழக்குகள் காணப் பெறுகின்றன. ஆதலால் அகத்திய மாணவர் பன்னிருவருள் ஒருவராகவும் தொல்காப்பியரோ ஒருங்கு பயின்ற மாணவராகவும் விளங்கிய அதங் கோட்டாசிரியர் வாழ்ந்த திருவிதாங்கூர்ப் பிரதேசமே தொல்காப்பியரின் பிறப்பிடம் என்பர். தொல்காப்பியரின் வாழ்க்கை வரலாறுகள் அறிய இயலவில்லை.

## தொல்காப்பியர் காலம் :

(1) சிலப்பதிகாரம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் இயற்றப் பெற்றது என்பர். சிலப்பதிகாரத்தில் திருக்குறளின் சொற்றொடர்களும் கருத்துக்களும் எடுத்தாளப் பெற்றுள்ளன. எனவே திருக்குறள் சிலப்பதிகார காலமாகிய கி.பி. இரண்டாம் நூற்றாண்டிற்கு முற்பட்டது என்பதும், கி.பி முதல் நூற்றாண்டளவில் தோன்றியது என்பதும் போதரும் திருக்குறள் தொல்காப்பியத்தை அடியொற்றிச் செல்லும் அறநூலாகும். அறம், பொருள், இன்பம் ஆகிய முப்பொருளும் செய்யுளுக்கு உரியன என்பது தொல்காப்பியர் கருத்தாகும் இப்பாகு பாட்டினைப் பின்பற்றியே திருவள்ளுவர் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப் பால் மூன்றினையும் அமைத்துள்ளார். இது மட்டுமன்று; தொல்காப்பியரது வாய்மொழியினையும் கருத்தினையும் எடுத்தாண்டுள்ளார் 'நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம்' என்பார் தொல்காப்பியர். திருவள்ளுவர் இந்நூற்பாவைப் பின்பற்றி, 'சுவை ஒளி ஊறுஓசை நாற்றம் என்றைந்தின் வகைதெரிவான் கட்டே யுலகு' என்று கூறியுள்ளார் 'நிறைமொழி மாந்தர் ஆணையில் கிளந்த மறைமொழி தானே மந்திரம் என்ப' என்பது தொல்காப்பியர் கூற்றாகும் இதனையே திருவள்ளுவரும், 'நிறைமொழி மாந்தர் பெருமை



நிலத்து மறைமொழி காட்டி விடும்' என்று கூறுகிறார். இவற்றால் தொல்காப்பியர், திருவள்ளுவர் காலமாகிய கி.பி. முதல் நூற்றாண்டுக்கும் முற்பட்டவர் என்பது விளங்கும்.

(2) சங்க இலக்கியங்கள் என்று கூறப்பெறும் எட்டுத் தொகையும் பத்துப்பாட்டும் கி.மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் கி.பி. மூன்றாம் நூற்றாண்டுவரை அமைந்த காலப் பகுதியினைச் சார்ந்தனவாகும். இச்சங்க இலக்கியங்களில் தொல்காப்பியத்திற்கு மாறான சில வழக்குகள் காணப் படுகின்றன.

1. 'கள்' என்னும் பன்மை விகுதி அஃறிணையில் மட்டும் வரும் என்பது தொல்காப்பியம். ஆனால் கலித்தொகையில் 'தீதுதீர் சிறப்பின் ஐவர்கள்' என உயர்திணையில் வந்துள்ளது.

2. 'அன்' விகுதி ஆண்பாற் படர்க்கைக்கே உரியது என்று தொல்காப்பியர் கூறியுள்ளார். 'யான் வாழலனே' (அகம் - 362) 'அளியன் யானே' (குறுந் - 30), 'கூறுவன் வாழி தோழி' (நற் - 233) எனத் தொகை நூல்களில் அன்விகுதி தன்மை யொருமையில் காணப்படுகிறது.

3. ஆல், ஏல், மல், மை, பாக்கு முதலிய இறுதியையுடைய வினையெச்சங்கள் தொல்காப்பியத்தில் கூறப்பெறவில்லை. ஆயின் கலித்தொகையில் உள்ள சில பாடல்களில் இவ்வினை யெச்சங்கள் வந்துள்ளன.

4. பலர்பால் படர்க்கையில் வரும் மாரீற்று முற்றுச் சொல் பெயர் கொள்ளாது வினைகொண்டு முடியும் என்பது தொல்காப்பியர் கருத்து. புறநானூற்றில், "உடம்பொடுஞ் சென்மார் உயர்ந்தோர் நாட்டே" (புறம் - 362) என மாரீறு பெயர் கொண்டு முடிந்துள்ளது.

5. மார் என்பது தொல்காப்பியர் காலத்தில் வினை விகுதியாகவே வழங்கப்பெறுகிறது. ஆனால் அகநானூற்றுப் பாடல் ஒன்றில் 'தோழிமார்' எனப் பெயர் விகுதியாக வந்துள்ளது.

6. வியங்கோள்வினை படர்க்கையில் அன்றி வாரா தென்பது தொல்காப்பிய விதி. இவ்விதிக்கு மாறான சொன்முடிபுகள் சங்க இலக்கியங்களில் உள்ளன.

7. சகரம் அகரத்தோடு கூடி மொழிக்கு முதலாகாது என்பது தொல்காப்பியம். சகடம், சடை, சதுக்கம், சந்து சமட்டி எனச் சகர அகரத்தைச் சங்க இலக்கியங்கள், மொழிக்கு முதலாக வழங்கியுள்ளன.

மேற்காட்டியன போன்ற இன்னும் சில விதிகளில் சங்
இலக்கியங்களுக்கும் தொல்காப்பியத்திற்கும் வேறுபா
காணப்படுகின்றது. தொல்காப்பியம் சங்க இலக்கிய
களுக்குப் பிற்பட்டதாயின், சங்க இலக்கியங்களில் அமைந்
மொழி நிலைக்கு இலக்கணம் கூறியிருத்தல் வேண்டு
அவ்வாறு விதிகள் கூறாமையால் தொல்காப்பியர் சங்
இலக்கிய காலமாகிய கி.மு. மூன்றாம் நூற்றாண்டுக்
முற்பட்டவர் என்பது சொல்லாமலே விளங்கும்.

(3) 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்' எனத் தொ
காப்பியரைப் பனம்பாரனார் பாராட்டியுள்ளார். ஐந்திர
என்பது வடமொழியில் அமைந்த மிகப் பழைய இலக்கண
நூலாகும். இந்நூல் வடமொழியில் சிறந்து விளங்கு
பாணினீயத்திற்கு முற்பட்டது என்பர் எனவே, பாணினீய
கற்ற தொல்காப்பியர் எனக் கூறாமல் ஐந்திரம் நிறைந்
தொல்காப்பியர் எனக் கூறப் பெற்றுள்ளதா
தொல்காப்பியர், பாணினீய ஆசிரியராகிய பாணினிக்
முற்பட்டவராவார். பாணினி கி.மு. நான்கு அல்லது ஐந்தா
நூற்றாண்டில் இருந்தவர் என மாக்டோனல்
வின்டெர்னிட்ஸ், கீத் முதலியோர் கூறியுள்ளனர். ஆதலா
தொல்காப்பியர் பாணினிக்கு முற்பட்டவர் என்பதும் கி.மு
ஐந்தாம் நூற்றாண்டினர் என்பதும் விளங்கும்.

(4) இரண்டாம் சங்கத்தின் இறுதியிலும் மூன்றா
சங்கத்தின் தொடக்கத்திலும் வாழ்ந்தவன் முடத்திருமாற
என்னும் நிலந்தருதிருவிற் பாண்டியனாவான். இப்பாண்டிய
அவையில் தொல்காப்பியம் இயற்றப் பெற்றது என்ப
பனம்பாரனார் பாயிரத்தால் தெரிகிறது. எனவே
தொல்காப்பியர், நிலந்தருதிருவிற் பாண்டியன் காலத்தவ
என்று கருதலாம். நிலந்தருதிருவிற் பாண்டியன் தெ
மதுரையில் மூன்றாம் சங்கத்தைத் தோற்று வித்ததன் காரண
இரண்டாம் சங்கம் இருந்த கபாடபுரம் கடல் கோளா
அழிந்தமையாலாகும். மகாவம்சம் தீபவம்சம், இராஜாவ
ஆகிய இலங்கை வரலாற்று நூல்களில் கி.மு. 2378-ல் முத
கடல்கோளும் கி.மு. 504-ல் இரண்டாவது கடல்கோளு
நிகழ்ந்ததாகக் குறிக்கப் பெற்றுள்ளது. கபாடபுர
அழிவதற்குக் காரணமான கடல் கோள், கி.மு. 504-
தோன்றியதாக இருக்கலாம். இதனாலும் தொல்காப்பிய



காலம் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டு என்பது பெறப்படும். ஆய்வாளர்கள் தொல்காப்பியர் காலத்தைப் பற்றிப் பலவாறாகக் கூறுவர். அவர்கள் கருத்துக்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 1. க. வெள்ளை வாரணன்: | கி.மு. 5320 | தமிழ் இலக்கிய வரலாறு பக் - 127 |
| 2. மறைமலையடிகள் : | கி.மு. 3500-க்கு முற்பட்டவர் | மாணிக்கவாசகர் வரலாறும் காலமும் பக். 595 |
| 3. கா.சு. பிள்ளை | கி.மு. 2000-க்கு முற்பட்டவர் | இலக்கிய வரலாறு பக். 67 |
| 4. ச.சோ. பாரதி : | கி.மு. 1000-க்கு முற்பட்டவர் | கலைக் களஞ்சியம் தொகுதி 6. பக். 217 |
| 5. ஞா. தேவநேயப் பாவாணர் | கி.மு. 7-ம் நூற்றாண்டு | தென்மொழி (இலக்கிய இதழ் இயல் இசை - 1.) |
| 6. V.R.R. தீட்சிதர் : | கி.மு 5-ம் நூற்றாண்டு | |
| 7. டாக்டர் மு.வ : | கி.மு. 5-ம் நூற்றாண்டு | கலைக்களஞ்சியம் தொகுதி - 5 பக் - 479. |
| 8. M. சீனிவாசை யங்கார் : | கி.மு. 4-ம் நூற்றாண்டிற்கு முற்பட்டவர் | Tamil Studies P. 117 |
| 9. கே.ஜி. சங்கரையர் : | கி.மு. 3-ம் நூற்றாண்டு | செந்தமிழ் தொகுதி - 15, பக். 648 |
| 10. ரா. இராகவையங் கார்: | கி.மு. 145-க்குச் சிறிது முற் பட்டவர் | தமிழ் வரலாறு பக்-261 |
| 11. P.T. சீனிவாசை யங்கார் : | கி.பி. முதலிரண்டு நூற்றாண்டு களைச் சார்ந் தவர் | History of Tamils P. 70 |

| | | |
|---|---|---|
| 12. தெ.பொ.மீ. | கி.பி. 2-நூற்றாண்டை ஒட்டிய சங்க நூல்களுக்கு முற்பட்டவர் | சமணத் தமிழ் இலக்கிய வரலா[று] பக் - 28 |
| 13. பெரிடேல் கீத் : | கி.பி. 4-ம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவர் | தமிழ்ச்சுடர் மணிகள் பக். 39 |
| 14. எஸ். வையாபுரிப் பிள்ளை: | கி.பி. 4அல்லது 5-ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் | தமிழ்ச்சுடர்மணி பக் - 39 |
| 15. கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி: | கி.பி. 5-ம் நூற்றாண்டு | |
| 16. கே. என். சிவராஜ பிள்ளை: | கி.பி. 6-ம் நூற்றாண்டு | |

## தொல்காப்பியர் சமயம் :

தொல்காப்பியரது சமயத்தைப் பற்றியும் அறி[ஞர்] களிடையே கருத்து வேறுபாடு உள்ளது. சிதம்பரம் ராமலிங்க[ம்] பிள்ளை இயற்றிய 'தொல்காப்பியர் சரித ஆராய்ச்சி' என்னு[ம்] நூலில் தொல்காப்பியர் சித்தாந்த சைவத்தைச் சார்ந்தவ[ர்] எனக் குறிக்கப் பெற்றுள்ளது. டாக்டர் பர்ணல் என்பார் தா[ம்] எழுதிய 'ஐந்திரம் என்ற வடமொழி வியாகரணம்' என்னு[ம்] நூலில் தொல்காப்பியர் பௌத்தராகவோ, ஜைனராகவே[ா] இருத்தல் வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். பேராசிரிய[ர்] எஸ். வையாபுரிப் பிள்ளையவர்கள் தொல்காப்பியரை[ச்] சமணர் என்பர்.[1] தொல்காப்பியர் சைனர் என்றோ சைன[ர்] அல்லர் என்றோ உறுதி கூற முடியாது என்பார் பேராசிரிய[ர்] தெ.பொ.மீ.[2] ரா. இராகவையங்கார் "வேத வழக்கொடுபட்[ட] நெறியினர்" என்பர்.[3] 'உலகம் உயிர் என்பவற்றிற்கு வேறாக[க்] கடவுள் என்னும் பேரறிவுப் பொருள் ஒன்று உண்டு என்பது[ம்]

1. தமிழ்ச்சுடர் மணிகள், பக்கம். 25
2. சமணத்தமிழ் இலக்கிய வரலாறு, பக்கம். 19
3. தமிழ் வரலாறு, பக்கம். 283.



கடவுளை வழிபடும் வாயிலாகப் பழி தீர் செல்வமொடு வழி வழி சிறக்கும் நல்வாழ்வினை மக்கள் பெறலாம் என்பதும், தெய்வ வழிபாட்டினால் வினைப்பயன்களை வென்று மேன்மேல் சிறத்தல் கூடும் என்பதும் தொல்காப்பியனார் கொண்டொழுகிய கடவுள் கொள்கை என்று கூறுவர்.[1] இவற்றை நோக்கும்போது தொல்காப்பியர், வள்ளுவர், இளங்கோ போலச் சமயப் பொதுமையாளர் எனச் சொல்லலாம்.

## நூல் அமைப்பு :

தொல்காப்பியம் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என முப்பெரும் பிரிவுடையது. ஒவ்வோரதிகாரமும் ஒன்பது ஒன்பது இயல்களால் அமைய 27 இயல்களைக் கொண்டு விளங்குகிறது இந்நூல். அமைப்பில் அழகு காண வேண்டும் என எண்ணிய தொல்காப்பியர், அதிகாரங்களிடையில் இயல்களுக்கு ஏற்றத் தாழ்வு இல்லாமல் ஒரே வகையில் இயல்களை யாத்துள்ளார். இந்தக்கலை யுள்ளம் தொல்காப்பியப் புறவமைப்பைச் செம்மைப்படுத்தி விட்டது. அதிகாரமும் இயல்களும் பின்வருமாறு:-

| I எழுத்ததிகாரம் | II சொல்லதிகாரம் |
|---|---|
| 1. நூன்மரபு | 1. கிளவியாக்கம் |
| 2. மொழிமரபு | 2. வேற்றுமையியல் |
| 3. பிறப்பியல் | 3. வேற்றுமை மயங்கியல் |
| 4. புணரியல் | 4. விளிமரபு |
| 5. தொகைமரபு | 5. பெயரியல் |
| 6. உருபியல் | 6. வினையியல் |
| 7. உயிர் மயங்கியல் | 7. இடையியல் |
| 8. புள்ளி மயங்கியல் | 8. உரியியல் |
| 9. குற்றியலுகரப் புணரியல் | 9. எச்சவியல் |

1. க. வெள்ளைவாரணன், தமிழ் இலக்கிய வரலாறு, பக்கம். 171.

III. பொருளதிகாரம்

1. அகத்திணையியல்
2. புறத்திணையியல்
3. களவியல்
4. கற்பியல்
5. பொருளியல்
6. மெய்ப்பாட்டியல்
7. உவமவியல்
8. செய்யுளியல்
9. மரபியல்

தொல்காப்பியம் என்பது மூன்றுறுப்பு அடக்கிய பிண்டம் என்பர் நச்சினார்க்கினியர். பேராசிரியர், 'சூத்திரம், ஓத்து படலம் என்னும் மூன்றும் அடங்கிய பிண்டம் தொல் காப்பியம்' என விரித்துரைப்பர். மேலும், பேராசிரியர், 'எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்பன படலம் எனப்படும்' என்றும் கூறுவர். இதனால் எழுத்துப் படலம், சொற்படலம், பொருட்படலம் எனவும் வழங்கப் பெறும் என்பது புலனாகும். இந்நூற் சூத்திரங்கள் ஆசிரியயாப்பில் அமைந்துள்ளன.

## சூத்திர எண்ணிக்கை :

தொல்காப்பியம் மூன்றதிகாரங்களுக்கும் உரிய சூத்திரத் தொகைகளைப் பின்வருமாறு மூன்று பழைய வெண்பாக்கள் கூறுகின்றன.

எழுத்ததி காரத்துச் சூத்திரங்க ளெல்லாம்
ஒழுக்கிய ஒன்பதோத் துள்ளும் – வழுக்கின்றி
நானூற் றிருநாற்பான் மூன்றென்று நாவலர்கள்
மேனூற்று வைத்தார் விரித்து.
தோடவிழ்பூங் கோதாய் சொல்லதிகா ரத்துள்
கூடிய ஒன்பதியற் கூற்றிற்கும் – பாடமாம்
நானூற் றறுபத்து நான்கேநன் னூற்பாக்கள்
கோனூற்று வைத்த குறி.

பூமலிமென் கூந்தால் பொருளியலின் சூத்திரங்கள்
ஆவவறு நூற்றறுபத் தைந்தாகும் – மூவகையால்
ஆயிரத்தின் மேலும் அறுநூற்றுப் பஃதென்ப
பாயிரத்தொல் காப்பியங்கற் பார்.

இவ்வெண்பாக்களால் குறிக்கப்பெற்ற தொல்காப்பியச் சூத்திரங்களின் மொத்த எண்ணிக்கை (483+464+665=)1612 ஆகும். ஆனால் மூன்றாவதாக உள்ள வெண்பாவில் சூத்திரங்



களின் எண்ணிக்கை 1610 எனக் காணப்படுகிறது. இவ்வேறு பாட்டின் விளைவு, உரையாசிரியர்களின் போக்கால் அமைந்து விட்டது போலும். உரையாசிரியர்கள் ஒரே எண்ணிக்கை அமைப்பினை மேற்கொள்ளவில்லை. எழுத் ததிகாரம் 483 சூத்திரங்கள் உடையது. இவ்வாறே கொண்டனர் இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும். சொல்லதிகார நூற்பாக்கள் 456, 463, 464, 453 என இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார் ஆகிய நால்வரும் கொண்டனர். பொருளதிகார நூற்பாக்கள் இளம் பூரணர் உரைப்படி 656 ஆகும். நச்சினார்க்கினியர் உரையின் வண்ணம் பொருளதிகாரம் முதல் ஐந்தியல்களின் நூற்பாக்கள் 248 பேராசிரியர் கருத்துப்படி பொருளதிகாரம் பின் நான்கியல்களின் நூற்பாக்கள் 417 ஆகும். இவற்றால் இளம்பூரணர் உரைப்படி தொல்காப்பியம் மூன்றதிகாரத் திற்கும் உரிய நூற்பாக்கள் 1595 ஆகும் என்பதும், நச்சினார்க் கினியர் கொண்ட செய்யுளியல் நூற்பாக்கள் 243 ஆகும். பேராசிரியரும் இவ்வாறு கொண்டு இச் செய்யுளியலுக்கு உரை எழுதியுள்ளார். இவ்வாறு தொல்காப்பிய உரையாசிரி யர்கள் தாம் விரும்பியவாறு சூத்திரங்களைப் பிரித்தும் கூட்டியும் பொருள் கூறியிருத்தலை நோக்குங்கால், இந்நூல் தெளிவாக வரையறுத்துக் கற்பிக்கப்படும் மரபினை இடைக் காலத்தில் இழந்திருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது.[1]

## நூல் நுவலும் பொருள்:

எழுத்ததிகாரம் எழுத்துக்களின் பிறப்பும் இயல்பும் திரிபும் பேசுகின்றது. இப்பகுதியில் தொல்காப்பியர் கூறும் எழுத்துக்களின் பிறப்பு பற்றிய கருத்துக்களை இன்றைய மொழி நூல் அறிஞர் பாராட்டுகின்றனர். இன்னின்ன எழுத்துக்களை ஈறாகவுடைய சொற்கள் இத்தனை என வரையறுத்துக் காட்டியுள்ளார். 'வகரக்கிளவி நான் மொழி ஈற்றது; னகரத் தொடர் மொழி ஒன்பஃதென்ப' என்னும் நூற்பாக்கள் இதற்குச் சான்றாகும்.

சொல்லதிகாரம், சொற்றொடர் அமைப்பு, சொற்களின் இயல்பு, சொல்லிலும் சொற் பொருளிலும் நேரும் திரிபு பற்றிக் கூறுகின்றது. இப்பகுதி சொல்லாராய்ச்சி செய்யும் அறிஞர்க்குத் தக்க விருந்தாகும்.

1. தமிழிலக்கிய வரலாறு, தொல்காப்பியம். பக்கம். 3

பொருளதிகாரம் அகவாழ்வும், புறவாழ்வும் பற்றி விரிவாகப் பேசுகின்றது. பிறமொழிகளில் எழுத்து சொல்லும் பற்றியே இலக்கணம் உண்டு. ஆனால் தமிழி சொல்லால் அமையும் பொருளுக்கும் இலக்கணம் கண்டன இப்பகுதியில் இலக்கியத்தில் அமைய வேண்டிய அ வாழ்விற்கும் புறவாழ்விற்கும் இலக்கணம் அமைக்கின்றா வாழ்விற்கும் புறவாழ்விற்கும் இலக்கணம் அமைக்கின்றார் செய்யுளைப் பற்றி விரிவாக ஆய்கின்றார். உள்ளத்தெ தோன்றும் உணர்ச்சிகள் எவ்வாறு வெளிப்படுகின்றன என்பதை மெய்ப்பாட்டியலில் உணர்த்துகின்றார். தமிழி அடிப்படை மரபுகளை மரபியலில் கூறுகின்றார்.

## தொல்காப்பியத்தின் சிறப்பு:

1. தொல்காப்பியத்தின் சிறப்பும் சீர்மையும் காலம் கடந்தவை தொல்காப்பியம் தமிழகத்தின் பழம் வரலாற்று ஏடு; தமிழின் இயல்பும் ஏற்றமும் உரைக்கும் நற்பனுவல். இந்நூலின் பெருமையினை இன்று சிலர் குறைத்து மதிப்பிட தொடங்கியுள்ளனர். மொழியியலும் ஒலியியலும் வளர்ந்து வரும்புதிய இலக்கண விஞ்ஞானக் கலைகளாகும் இக்கலைகளின் நுழை வாயிலிலேயே இன்று பல நிற்கின்றனர். இவற்றின் இயல்பும் பிறவும்கூட அறிந்தார் மிக சிலரேயாவர். இந்நிலையில் இக்கலைகளைக் கற்போர் வகுப்புக்குள் சென்று, ஒரு மணிநேரம் அமர்ந்து, வெளிவரும் போது தொல்காப்பியர் தவறு செய்து விட்டார் என்று பல்லவியோடு வருகின்றனர். இவ்வளவுவிரைவில் இவர் களுக்கு எவ்வாறு 'ஞானோதயம்' ஏற்பட்டது என்பது புலனாகவில்லை. என்ன தவறு செய்தார் என்பதையேனும் தமிழில் எழுதி வெளியிடின் இனிவரும் தமிழ் கூறு நல்லுலகமாவது பயன் அடையும். அவ்வாறும் இவர்கள் செய்திலர். இந்திய நாகரிகத்தின் இரு கண்கள் என கருதப்படும் தென்மொழியும் வடமொழியும் இலக்கண பழமையுடையன. தென்மொழி இலக்கணத்தினை தொல்காப்பியரும் வடமொழி யிலக்கணத்தைப் பாணினியும் மிகத் தெளிவாக விளக்கி இலக்கணம் அமைத்துள்ளனர் என்பது அறிஞர் பலரும் ஒப்பிய முடிபு. இவற்றுள் பாணினியத்தை உலகத்தார் நன்கு புரிந்து போற்றி வருகின்றனர்; ஆய்ந்து வருகின்றனர். தொல்காப்பியத்தையும் உலகப் பேரறிஞர்முன் எடுத்துக் காட்ட வேண்டும். இதனைத் தமிழும் ஆங்கிலமும் கற்ற பேரறிஞர்கள் செய்ய



முற்படவேண்டும். அவ்வாறு செய்யின் தொல்காப்பியத்தின் பெருமைகளைப் புறவுலகும் காண வாய்ப்பு நேரிடும். தொல்காப்பியத்தின் சிறப்பியல்புகளை ஓரளவு காண்போம்.

1. தொல்காப்பிய நூற்பாக்கள் மிக எளிமையுடையன. படிப்போர் இலக்கணச் சூத்திரங்களைப் படிக்கின்றோம் என எண்ணாமல், இலக்கியச் சோலைக்குள் புகுகின்றோம் என்று எண்ணுமாறு செய்கின்றன.

2. தொல்காப்பியம் விரிந்துபட்ட இலக்கணம். சுருங்கச் சொல்வதனால் கற்போரின் அறிவை ஈர்க்கலாம். ஆனால் விரிவில் ஏற்படும் விளக்கமும் தெளிவும் சுருங்கச் சொல்வதில் ஏற்படுவதில்லை. இதனால் தொல்காப்பிய விரிவு படிப்போர் மதியை மருட்டாமல் மலர்ச்சியே தருகின்றது.

3. தொல்காப்பியம் தலைமைச் சிறப்புடையது, தாய்மைப் பண்பு கொண்டது. தலைமை என ஒன்றிருந்தால் அதனைப் பின்பற்றிச் செல்லும் சங்கிலித் தொடர் ஒன்று உருவாக வேண்டும். நல்ல தலைவன் தனக்குப்பின் தன் பெயர் சொல்லும் பெற்றியுடையாரைப் பிறப்பிக்க வேண்டும் என்பர். இத்தலைமை இலக்கணம் தொல்காப்பியருக்கு மிகமிகப் பொருந்தும். தொல்காப்பியத்தின் வழித் தோன்றியனவே பின் வந்த இலக்கியங்கள் எல்லாம். சங்க இலக்கியங்களில் தொல்காப்பிய ஆட்சி உயர்ந்து நிற்கிறது. திருக்குறளில் காமத்துப்பாலும், பொருட்பாலும் பல அதிகாரங்களும் தொல்காப்பியப் பற்றுக் கோடு உடையன. தொல்காப்பியம் கற்றபின் திருக்குறளைக் கற்பார் பெறும் அறிவு வேறு; அதனைக் கல்லாது திருக்குறளைக் கற்பார் அறிவு பிறிது எனநாம் உணர வேண்டும் என்பர் டாக்டர் வ.சுப. மாணிக்கனார் அவர்கள். தொல்காப்பியம் புறத்திணையியல் வஞ்சிக் காண்டமாக வடிவெடுத்து நிற்கக் காண்கிறோம். தொல்காப்பியத் தாய்மை ஊற்றே தமிழ் இலக்கியங்களில் பரவி நிற்கின்றது என்பது இலக்கிய வளர்ச்சியினை ஆராய்வார்க்கு விளங்காமல் போகாது.

(4) தொல்காப்பியம் மொழிக்கலையின் மூலங்கள் நிறைந்த நூல். பேச்சு வழக்கும் செய்யுள் வழக்கும் ஆராய்ந்து வெளிப் படுத்திய முதல் நூல். மொழி வளரும்; மாறும் என்பதனை அறிந்து 'கடிசொல் இல்லைக் காலத்துப் படினே' எனக் கூறிய முன்னூல். தொல்காப்பியன் ஒரு மொழியறிஞன் என்பர். இவ்வுண்மை இவரது உயர்வுக்கும் காலம் கடந்த புலமைக்கும் எடுத்துக்காட்டாகும்.

பின் தோன்றிய இலக்கண நூல்களின் செம்மைக்கு அடிப்படை தொல்காப்பியமே. நன்னூலின் அழகிய அமைப்பும், அருமை பெருமையும் தொல்காப்பியத்தால் விளைந்தனவே யாகும். நன்னூலார், தாம் புதிதாகப் படைத்துக் கொண்ட பதவியல் ஏனைப் பகுதிகள் போல அமையாமல் நெகிழ்ச்சி கண்டுள்ளது என்பர். இதற்குக் காரணம் தொல்காப்பியர் முன்னோடியாக நின்று பதவியல் பாதையைத் தெளிவாக வகுத்துக் காட்டாமையேயாகும்.

தொல்காப்பியத்தின் பின் வந்த தமிழறிஞர்கள், தொல் காப்பியன் ஆணை பெருமையுடையது; வலிமை வாய்ந்தது எனக் கருதினர். கடவுள் ஆணையை மீறினாலும் மீறலாம்; தொல்காப்பிய ஆணையை மீறக் கூடாது என எண்ணினர்.

'கூறிய குன்றினும் முதனூல் கூட்டித்
தோமின் றுணர்தல் தொல்காப் பியன்தன்
ஆணையில் தமிழறிந் தோர்க்குக் கடனே'

என்பர் ப்ல்காப்பியனார்.

தொல்காப்பியம் ஒழுங்கு பெற்ற இலக்கண நூல். தொல்காப்பியருக்கு முன்னிருந்தோர் விரவிச் செய்த இலக்கணங்களை வகுத்தும் தொகுத்தும் வகைப்படுத்தியவர் தொல்காப்பியனாரே ஆவர். இதனை 'மயங்கா மரபின் எழுத்துமுறை காட்டி' என்னும் பாயிரத்தொடர் உணர்த்தும். அதிகாரப் பகுப்பும் இயல் வகுப்பும் செம்மையைக் காட்டும்.

திருக்குறள் மக்கட்கு உயிர் நூலாவது போலத் தொல்காப்பியம் தமிழுக்கு உயிர் நூலாகும்.[1] தமிழின் பழமை, செம்மை உரைப்பதற்கும் தொல்காப்பியமே சான்று தருகின்றது. தமிழின் உயிர் நாடி, தொல்காப்யிம் எனில் மிகையன்று.

தொல்காப்பியம் இலக்கண நூல் மட்டுமன்று; இலக்கிய நூலும்கூட. இந்நூலில் இலக்கியச் சாயலைக் காண்கிறோம். இலக்கணம் தத்துவத்தோடு தர்க்கத்தோடு இணைந்து வளராமல் இலக்கியத்தோடு ஒன்றி வளர்ந்த காலத்தில் தொல்காப்பியம் எழுந்தது ஆதலால், இலக்கியச் சாயல் அங்கே ஒளிவிடுகின்றது. 'தந்தையர் ஒப்பர் மக்கள் என்பதனால், அந்தமில் சிறப்பின் மகப் பழித்து நெருங்கினும்', 'காதல் எங்கையர் காணின் நன்றென மாதர் சான்ற வகையின்

1. டாக்டர். வ.சுப. மாணிக்கம். தொல்காப்பியப் புதுமை. பக்கம் - 10.



கண்ணும்' என்பன போன்ற வரிகள் சிறந்த இலக்கியப் போக்கு உடைய நூல் என்பதற்குச் சான்றாக விளங்குகின்றன. தலைவி தன் மகவைப் பழித்து, தலைவனை நெருங்குவாள் என்று சொன்னால் அது இலக்கணம். அவ்வாறு கூறாமல், தந்தையர்போல இருப்பர் மக்கள் என்று பழித்துத் தலைவி நெருங்குவாள் என்று சொன்னால் அதுவே இலக்கியம். இவ்விலக்கிய இயல்புகளைத் தொல்காப்பியத்தில் பல இடங்களில் காண்கிறோம்.

தொல்காப்பியச் சிறப்புக்கு ஓர் எடுத்துக் காட்டு உரையாசிரியர்களின் தோற்றம், தொல்காப்பியமும் திருக்குறளும் பலர் உரை பெற்ற பாங்குடையன. தொல் காப்பிய உரையாசிரியர்கள் சாமானியர்கள் அல்லர். நுண்மாண் நுழைபுலம் மிக்கவர்கள். தொல்காப்பியத்தின் இலக்கண அமைப்பைப் பலவாறு எடுத்துக் காட்டியவர்கள்.

**உரையாசிரியர்கள் :**

தொல்காப்பிய உரையாசிரியர்கள் இளம்பூரணர், பேராசிரியர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், தெய்வச் சிலையார், கல்லாடர் என அறுவராவர். சிவஞான சுவாமிகளும் அரசஞ்சண்முகனாரும் சிலபகுதிகளுக்கு உரைகண்டனர். இந்நூற்றாண்டில் வாழ்ந்த நாவலர் சோமசுந்தர பாரதியார், சில பகுதிகளுக்கு உரை வரைந்தார். க. வெள்ளைவாரணர் நூல் முழுதும் பலர் உரையோடு ஒப்பிட்டு ஆய்ந்து உரைச்செம்மை அளித்துள்ளார். இவர்களைப் பற்றியும், இவர்கள் உரைபற்றியும் பின்னர் காண்க.

உரையாசிரியர்கள் தொல்காப்பியக் கோயிலை அணுகும் போது அச்சத்துடனேயே சென்றனர். நூலாசிரியன் தவறு செய்ய மாட்டான் என்ற நிறை ஆய்வுக் கொள்கையின் அடிப்படையில் ஆய்ந்தனர். சில இடங்களில் நூலாசிரியன் செய்தது சரியா? என எண்ணுகிறார்கள். இக்கேள்வியை எழுப்பிக்கொண்டு அவர் செய்தது சரியே என முடிவும் கட்டுகின்றார்கள். இங்கெல்லாம் உரையாசிரியர்கள் உள்ளம் தொல்காப்பியத்தினிடத்தில் விளக்கம் கேட்டு நின்ற நிலையைப் பார்க்கிறோம். தொல்காப்பியர் தோன்றி 1500 ஆண்டுகளுக்குப் பிற்பட்டு வந்தவர்களே உரையாசிரியர்கள் ஆவார்கள். இவர்களுக்கு முன்னால் உரையாசிரியர்கள்

இருந்திருப்பார்கள். ஆனால் இவர்களால் பெற்ற விளக்கத்தினைக் காட்டிலும் பின்வந்த உரையாசிரியர்களால் கிடைத்த விளக்கங்களே பல. இவ்விளக்கங்கள் இன்றேல் தொல்காப்பியத்தினை அறிதல் ஓரளவு இயலாத செயலாகும். தொல்காப்பிய சன்னதியில் அணையா விளக்கு தூண்டா விளக்கு ஏற்றி வைத்த இவர்கள் தமிழ் உள்ளத்தினின்றும் என்றும் நீங்காதவர்கள் ஆவார்கள்.

## இளம்பூரணர்:

தொல்காப்பியத்திற்கு உரை கண்டோருள் காலத்தாலும், நூலாசிரியர் உளமறிந்து உரைவகுக்கும் நுட்பத்தாலும் முதியவர் இளம்பூரணர் ஆவார். இவர் இளம்பூரண அடிகள் எனவும் வழங்கப் பெற்றார். திருக்குறளுக்கு உரைகண்ட பதின்மருள் ஒருவராகிய மணக்குடவர், இளம்பூரணரே என்பர் பண்டாரத்தார் அவர்கள்.[1]

## இளம்பூரணரும் மணக்குடவரும் ஒருவரா?

இளம்பூரணர் தொல்காப்பியம் முழுமைக்கும் உரைகண்டவர். இவ்வுரையேயன்றித் திருக்குறளுக்கு ஓர் உரையும், கொங்குவேள் இயற்றிய பெருங்கதைக்கு ஒரு குறிப்புரையும் எழுதியுள்ளார் என இவரது உரைச் சிறப்புப் பாயிரம் கூறுகின்றது.

'தண்கட லசைவளி யுறுப்பத் திரைபிதிர்ந்
தூங்கலின் பொருட்குவைப் புணரியிலையுற
அலைவமன் மயரினை யகற்ற லெழுத்தால்
திணைதுறை உட்கோள் இயற்றிற னறியாக்
கவர்பொருள் மாக்கள் மயக்கினுக் கிரங்கிப்
பாயிருங் காப்பியச் சுவைபல வுணர்ந்தகம்
தோய மடுத்தோர் தொல்காப்பியனுரை
முத்திற வோத்தினுக் கொத்தசீர்க் காண்டிகை
சொன்னிலை மேற்கோள் தொகுபொருள் துணிபுடன்
இயல்நூற் பாமுடி பிணைத்தடி காட்டித்
தலைகடை கூட்டித் தந்தனன்; பண்டே
கொங்குவேள் மாக்கதை குறிப்புரை கண்டோன்
தன்னறி அளவையில் நல்லுரை தேவர்
பன்மணிக் குறட்பான் மதிப்பிடப் பொறித்தோன்

1. இலக்கிய ஆராய்ச்சியும் கல்வெட்டுக்களும் பக்கம் 60.



குணகடல் செல்லூார் மணக்குடி புரியான்
தண்முலை கையென வெண்ணூல் சூடி
அந்தணன் துறவோன் அருமறை உணர்ந்த
இளம்போதி பயந்த புனிதன்
இளம்பூ ரணன்உரை இனிதுவாழ் கீங்கென்'

என்பது அப்பாயிரம். இப்பாயிரத்தால், தொல்காப்பிய உரை எழுதுதற்கு முன்னரே கொங்குவேள் மாக்கதைக்கும், குறளுக்கும் உரை எழுதினர் என்பதும், இவர் மணக்குடிபுரியான் என்னும் மற்றொரு பெயர் உடையவர் என்பதும் புலனாகின்றன.

திருக்குறளுக்கு உரைகண்ட பதின்மர் பெயரினையும்,

தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சர்,
பரிமேலழகர் பருதி – திருமலையர்
மல்லர் பரிப்பெருமாள் காலிங்கர் வள்ளுவர் நூற்(கு)
எல்லையுரை செய்தார் இவர்

என்னும் வெண்பாவால் அறியலாம். இவ்வெண்பாவில் குறிக்கப் பெறும் மணக்குடவரே, மணக்குடிபுரியான் என்னும் பெயர் உடைய இளம்பூரணர் ஆவர். ஆதலால் இளம்பூரணரும் மணக்குடவரும் ஒருவரேயாவர். இதற்குச் சான்றாகத் தொல்காப்பியம் புறத்திணையியலிலும், திருக்குறளிலும் ஒழுக்கமுடைமை, நடுவு நிலைமை, வெஃகாமை, அழுக்காறாமை என்பவற்றை விளக்கியுள்ள உரைநடைப் பகுதிகளும், தீவினையச்சம், கள்ளுண்ணாமை, கொல்லாமை, கள்ளாமை, அருளுடைமை என்பவற்றின் விளக்கவுரைகளும் ஒன்றாக அமைந்திருப்பது உணரத் தக்கது. **இளம்பூரணர் என்பது இவரது இயற்பெயராகும்; மணக்குடவர் என்பது இவரது குடிப் பெயராகும்.** இவ்வரிய ஆராய்ச்சிக் கருத்தினைத் தமிழுலகுக்கு அளித்த பேரறிஞர் சதாசிவ பண்டாரத்தார் அவர்கள் ஆவார்.[1] மணக்குடவர் உரை கிடைத்துள்ளது. பெருங்கதைக் குறிப்புரை இப்போது கிடைக்கவில்லை.

## உரையாசிரியரும் இளம்பூரணரும் ஒருவரா?

தொல்காப்பியம் முழுமைக்கும் உரைகண்ட இளம்பூரணர் உரையே தொல்காப்பியத்திற்கு வரையப்பட்ட முதல் உரை என்பர். இப் பெருமைகருதி இவரை இளம்பூரணர்

1. இலக்கிய ஆராய்ச்சியும் கல்வெட்டுக்களும். பக்கம். 57-63.

என்னும் இயற்பெயரால் கூறாது உரையாசிரியர் என்ற சிறப்பு பெயரால் வழங்குவாராயினர். இதனால் இளம்பூரண உரையாசிரியர் என்னும் பெயருடையார் என்பது விளங்கு ஆனால், சிலர், இளம்பூரணர் வேறு, உரையாசிரியர் வே இருவரும் ஒருவரல்லர் எனக்கூறுவர். இதன் உண்மையினை காணுதல் நம் கடனாகும்.

(1) அடியார்க்கு நல்லார், சிலப்பதிகாரத்தி நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்' என்பத உரையில் குமரியாறு கடல் கொண்ட செய்தி என்றா பெறுதுமெனின், 'கணக்காயனார் மகனார் நக்கீரனா உரைத்த இறையனார் பொருளுரையானும், உரையா ரியராகிய இளம்பூரணவடிகள் முகவுரையானும் பெறுதும்' எனக் கூறியுள்ளார். இதனால் இளம்பூரணரும் உரையாசி ரியரும் ஒருவர் என்பது பெறப்படும். ஆனால் அடியார்க்கு நல்லார் கூறும், இளம்பூரணர் உரைப்பகுதி, இப்பொழுதுள்ள இளம்பூரணருரையில் காணப்படவில்லை. இதற்குக் காரணம் பின் வந்தோர் ஏட்டில் எழுதும் காலத்து விடுபட்டது எனக் கருதலாம்.

(2) சேனாவரையர், உரையாசிரியர் கருத்துக்கள் பலவற்றைக் காட்டுகின்றார். அவற்றுள் சில இளம்பூரணர் கருத்தாக உள்ளன. சில இப்பொழுதுள்ள இளம்பூரணர் உரையில் இல்லை. கிளவியாக்கத்தில் 'னஃகான் ஒன்றே ஆடூஉ அறிசொல்' என்னும் நூற்பாவில், சேனாவரையர் ஏகாரத்தை அசைநிலை என்பர். மேலும் 'உரையாசிரியர் பிரிநிலை என்றாரால் எனின் அது போலியுரை என்க' என்றும் மறுப்பர். இங்குக் கூறும் உரையாசிரியர் கருத்து, இளம்பூரணர் உரையில் உள்ளது. இவ்வாறே சில இடங்கள் காணப் படுகின்றன. இதனால் உரையாசிரியரும் இளம்பூரணரும் ஒருவர் என அறியலாம்.

சேனாவரையர், பெயரியலில்,

> இருதிணைப் பிரிந்த ஐம்பாற் கிளவிக்கும்
> உரியவை உரிய பெயர்வயி னான'

என்னும் நூற்பாவிற்குப் பெயர்ச்சொல் ஈறுபற்றி உணர்த் தலாகாது என்று கூறுகின்றார். இக்கருத்தினையே இளம் பூரணரும் கூறியுள்ளார். ஆனால் சேனாவரையர் உரை யாசிரியர் கருத்து என ஒன்றனைக் காட்டி மறுக்கின்றார்.



இவ்வுரையாசிரியர் இளம்பூரணராக இருக்க முடியாது. இதனால் உரையாசிரியர் இளம்பூரணரின் வேறானவர் என்பது தெளியப்படுகின்றது.

(3) சேனாவரையர் போல நச்சினார்க்கினியரும் உரை யாசிரியர் கருத்துக்கள் பலவற்றைக் காட்டுகின்றார். நச்சினார்க்கினியர், எழுத்ததிகாரத்தில்[1] உரையாசிரியர் கருத்து எனக் கூறி மறுக்கும் இடங்கள் இளம்பூரணர் உரையில் உள்ளன. ஆனால் நூன்மரபில் 'மெய்யோடு இயையினும் உயிரியல் திரியா' என்னும் நூற்பா உரையில், 'விளங்காய் திரட்டினார் இல்லை களங்கனியைக் கார் எனச் செய்தாரும் இல் என்பதே காட்டினார் உரையாசிரியரும்' என்னும் பகுதி இளம்பூரணத்தில் இல்லை.

இவற்றால், இளம்பூரணரே உரையாசிரியர் என வெளிப் படையாக அடியார்க்கு நல்லார் கூறியுள்ளார் என்பதும், ஏனைய உரையாளர்களும் இளம்பூரணரை உரையாசிரியர் எனக் குறிப்பிட்டுள்ளனர் என்பதும், இளம்பூரணராகிய உரையாசிரியர் அல்லாத ஏனைய உரையாசிரியர்களையும் அவர்களது பெயர்களைக் கூறாமல் உரையாசிரியர் எனச் சுட்டியுள்ளனர் என்பதும் பெறப்படும். எனவே, இளம் பூரணரும் உரையாசிரியரும் ஒருவர் எனக்கோடலில் யாதொரு குற்றமுமில்லை என்பது விளங்கும். சில இடங்களில் சில உரையாசிரியர்களையும் உரையாசிரியர் எனக் குறிப் பதால் இளம்பூரணர் உரையாசிரியர் எனச் சிறப்பாகச் சுட்டப் பெறுதல் கூடாது என்பது ஒவ்வாது.

## காலமும் சமயமும்:

யாப்பருங்கல விருத்தியில் காணப்படும் மேற்கோள் பாடல்களை இளம்பூரணரும் எடுத்துக்காட்டியுள்ளார். மேலும் செய்யுளியலுக்கு இளம்பூரணர் கண்ட உரை யாப்பருங்கலத்தால் புதிய விளக்கம் பெற்றது என்னலாம். யாப்பருங்கலமும் அதன் உரையும் கி.பி. பத்தாம் நூற்றாண்டில் தோன்றியன என்பர். எனவே இளம்பூரணர் பத்தாம் நூற்றாண்டுக்குப்பிற்பட்டவர் என்பது போதரும். இளம் பூரணர், நம்பியாண்டார் நம்பி பாடிய மூத்த நாயனார்

1. நூன்மரபு, சூத்திரம். 27; மொழிமரபு, சூத்திரம் 17. புள்ளிமயங்கியல், சூத்திரம் 21. காண்க.

மாலையிலிருந்து உதாரணம் காட்
திருவிரட்டைமணி நம்பியின் காலம் கி.பி. பதினொ
கின்றார்.[1] நம்பியாண்டார் நம்பியின் காலம் கி.பி. பதினொ
றாம் நூற்றாண்டு ஆகும். அதே நூற்றாண்டில் வாழ்ந்தவராக
கருதப்படும் ஒளவையாரது, ‘கொன்றை வேய்ந்த செல்வ
அடியிணை’ என்னும் பாடலையும் மேற்கோளாகக் காட்
கின்றார்.[2] இவற்றால் இவர் கி.பி. பதினோராம் நூற்றா
டுக்குப் பிற்பட்டவர் என அறியலாம். நன்னூல் இயற்றி
பவணந்தி முனிவர், இளம்பூரணர் உரைக் கொள்கையினை
தழுவியே நன்னூல் இயற்றினர் என்பர். நன்னூலார் கால
கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டாகும். ஆதலால் இள
பூரணர் கி.பி. பதின் மூன்றாம் நூற்றாண்டுக்கு முற்பட்டவ
எனலாம். எனவே இளம்பூரணர் கி.பி . பன்னிரண்டாம
நூற்றாண்டினர் என்பது தெளிவாக விளங்கும்.

இளம்பூரணன் என்பது முருகக் கடவுளின் பெயரென
கொண்டு இவரைச் சைவர் என்பர். இவ்வாறு கூறுதற்கு ஏற்
அகச்சான்றுகள் ஏதும் அவர்கள் காட்டிலர், படிமை என்பது
சைன மதத்தில் பிற்காலத்தில் வழங்கிய சொல்லாகும்
அதற்கேற்ப இதற்கு மெய்யுரை கூறிய இவ்வுரையாசிரிய
சமணராகலாம். இவர், ‘அகர முதல் னகர இறுவாய்’ என
தொல்காப்பியர், னகரத்தை ஈற்றில் அமைத்ததற்குக் காரணம்
வீடு பேற்றிற்குரிய ஆண்பால் ஈறாகும் சிறப்புடைமையே
என்று காட்டுகின்றார். இதனால் இவர் பெண்களுக்கு
வீடுபேறு இல்லை எனக் கருதும் திகம்பரசமணக் கொள்கை
யினர் எனலாம்.[3]

## இவரைப்பற்றிய வரலாற்றுச் செய்திகள்:

இவர் பேராசிரியரின் மாணவர் என்றும், நச்சினார்
கினியரின் ஆசிரியர் என்றும் கூறுவர். இவை கற்பனையே
யாகும். முன்னர்க் காட்டிய இவரது உரைச் சிறப்புப்பாயிர
செய்யுளால் இவர் கீழ்கடலைச் சார்ந்த செல்லூரின
என்பதும், மறையில் வல்ல இளம்போதி என்பவரின் புதல்வ
என்பதும், துறவற நெறியில் நின்ற அந்தணர் என்பது
தெரிகின்றன. ஆசிரியரை ஞானபிதா எனக் கூறுத
மரபாதலால், இவரை ‘இளம்போதி பயந்த’ என்
கூறியிருத்தலும் கூடும். அவ்வாறு கொள்ளின் இளம்போ

1. தொல்காப்பியம், நூற்பா, 484, உரை.
2. தொல்காப்பியம், நூற்பா, 483, உரை.
3. தெ.பொ. மீ. சமணத்தமிழ் இலக்கிய வரலாறு, பக்கம், 157.



என்பார் ஆசிரியராவார். இளம்பூரணர் துறவி என்பதனை, ‘இஃது ஒல்காப் புலமைத் தொல்காப்பியத்துள் உளங்கூர் கேள்வி இளம்பூரணர் எனும் ஏதமில் மாதவர் ஓதிய உரை என்றுணர்க’ என்று மயிலைநாதர் கூறுவதாலும்' அறியலாம்.

## உரையின் இயல்பு:

இவர் உரை தெளிவாகவும் அளவாகவும் அமைந்துள்ளது. இனிய எளிய நடையால் இயன்றது. நூற்பாக்களை வேண்டிய வாறு பிரித்து இயைத்தும், முன்னும் பின்னும் மாட்டேற்றியும் பொருள் கூறாமல் ஆற்றொழுக்காகப் பொருளை விளக்கிச் செல்வார். இவரே தொல்காப்பியர் உளமறிந்து உரைவரைந்த உரையாசிரியர் என்பர். இவரைச் சிவஞான முனிவர் ‘தமிழ் நூல் ஒன்றே வல்ல உரையாசிரியர்’ என்று குறிப்பிடுவார்.[2] இவர், ‘பிறர் நுழைந்து காண முடியா வண்ணம், இருண்டு கிடந்த தொல்காப்பியம் என்னும் சரக்கறையுள், தம் அறிவென்னும் அவியா விளக்கைக் கொண்டு துருவி, அங்கே குவிக்கப்பட்டிருந்த அரதனக் குவியல்களை உலகிற்கு முதலில் காட்டிய பெருந்தகையார் ஆவர். இவர்க்குப் பின்வந்த உரைகாரரது செய்கையெல்லாம், தொல்காப்பியச் சரக்கறையுள் இவ்வடிகள் ஏற்றி வைத்திருந்த அவியா விளக்கின் உதவியால் அங்கிருந்த அரதனக் குவியல்களைக் கண்டு வியந்ததும், அவ்வரும் பெறல் பொருள்களை மாசு நீக்கித் தூசுபடியா வண்ணம் சுத்தம் செய்து வைத்தது மேயாகும்.[3] இவர் தமக்குத் தெளிவு படாத இடங்களில் தயக்கத்தோடு உரை எழுதிச் செல்கின்றார். தொல்காப்பியச் சூத்திரங்கள் சில காலப் போக்கில் விடுபட்டுப் போயிருக்கும் என இவர் நம்பியுள்ளார். இதனை, ‘தலைமகள் கூற்று உணர்த்திய சூத்திரம், காலப் பழமையால் பெயர்த்தெழுதுவார் விழ எழுதினார் போலும்’[4] என்று கூறுதலால் அறியலாம்.

சேனாவரையர் முதலாய உரையாசிரியர்கள், இளம்பூரணரை நன்கு மதித்தனர். அதனால் இளம்பூரணரை மறுக்கும் இடங்களில் கூட மிக நாகரிகமாக மறுத்துச் சென்றனர். இவர் தொல்காப்பியக் கலைக் கோயிலைத்

1. நன்னூல், சூத்திரம், 359 உரை.
2. தொல்காப்பிய முதற் சூத்திரவிருத்தி பக்கம் 28.
3. செந்தமிழ், தொகுதி 4. பக்கம் 116.
4. தொல்காப்பியம், பொருளதிகாரம் 45 உரை.

பெரியவர் என்ற மதிப்பினைப் பின்வந்தோர் திறந்துவிட்ட மறக்கவில்லை. இவர் காட்டும் மேற்கோள் பாடல்களையே பின்வந்தோர் பெரும்பாலும் எடுத்தாண்டனர். இளம்பூரணர் நல்ல தமிழ் நூற் பயிற்சியுடையார். இதனை அவர் காட்டும் மேற்கோள் நூல்களால் அறியலாம்.

## சேனாவரையர்:

'வடநூற் கடலை நிலைகண்டுணர்ந்த சேனாவரையர்' என்பர் சிவஞான முனிவர். சேனாவரையர், சொல்லதிகாரத்திற்கு மட்டும் உரைகண்டவர் ஆவர். இவர் உரையே சொல்லதிகாரத்திற்குச் சிறந்தது எனப் பாராட்டப்படுகின்றது. இவர் வடமொழியும் தமிழும் நன்கு பயின்றவர். இவ்விரு பெரிய மொழிகளும் இருவேறு தனி மொழிகள் என்பதை மறந்து வடநூல் முடிபுகளையும், கொள்கைகளையும் தமிழ் மொழிக்கு உரிய இலக்கணங்களில் புகுத்தி அவற்றிற்கு அமைதி கூறியவர். இவரது வடமொழிப் பயிற்சி யொன்று பற்றியே இவர் உரையாசிரியர்களுள் சிறந்தவர் என்று இக்காலத்தவரால் பாராட்டப்படுகின்றார்.

## பெயர் :

சேனாவரையர் என்னும் சொல் படைத்தலைவர் என்ற பொருளைத்தரும். 'அவற்றுள் கிளையெண் குழூஉ' என்று தொடங்கும் நன்னூல் சூத்திர உரையில் சிறப்பால் பெறும் பெயர்க்கு ஆசிரியன், படைத்தலைவன், சேனாவரையன் என்பனவற்றை மயிலைநாதர் உதாரணமாகக் காட்டியுள்ளார். இதனால் அக்காலத்தில் அரசர்கள், படைத் தலைவர்களுக்கு வழங்கும் சிறப்புப் பெயர் சேனாவரையர் என்பது புலனாகும். ஆனால் இப்பெயர் இயற்பெயராகவும் காணப்படுகின்றது. உரையாசிரியராகிய சேனாவரையர் பெயர் இயற்பெயரே என்பர் பண்டாரத்தார் அவர்கள். சேனாவரையர் என்னும் பெயர் சாசனங்களில் காணப்படுகின்றது.

'திருவழுதி வளநாட்டுத் திருவள்ளூர்ச் சேனாவரைய
ணாயினதத்தன்'

'மிழலைக் கூற்றத்துப் புதுக்குடியூரினரான சேனாவரையர்.'



## காலம் :

கல்வெட்டொன்றில்[1] 'ஆற்றூர்ச் சேனாவரையன்' எனக் கூறப்பட்டுள்ளது. இக் கல்வெட்டுக் குறிக்கும் அரசன் எம்மண்டலமும் கொண்டருளிய மாறவர்மன் குலசேகர பாண்டியன் ஆவான். இவன் காலம் கி.பி. 1268-1311 என்பர். இக்காலமே சேனாவரையர் காலமாகும். ஆற்றூர்ச் சேனாவரையரே இவ்வுரையாசிரியர் என்பதற்கு நூலிலும் சான்றுகள் உண்டு. ஆற்றூர் என்பது திருநெல்வேலி மாவட்டத்தில் கொற்கைக்கு அண்மையில் உள்ள ஊராகும். இக்கொற்கையினைச் சூழ்ந்த நாடு மாறோக நாடு எனப்பட்டது. சேனாவரையர் இந்நாட்டு வழக்கம் ஒன்றனைத் தம் உரையில் குறித்துள்ளார். 'புறத்துப்போய் விளையாடும் பேதைப் பருவத்துப் பெண்மகளை மாறோக்கத்தார் இக்காலத்தும் பெண்மகன் என்று வழங்குப' என்பதே அவ்வழக்கமாகும். பிற உரையாசிரியர்கள் இடங்காட்டி விளக்காத பெண்மகன் என்னும் சொல்லினை இவர் இடம் காட்டி இவ்வாறு விளக்குதலால் அந்நாட்டவரே ஆதல் வேண்டும். மேலும் 'தென்பாண்டி நாட்டார் ஆ எருமை என்பவற்றைப் பெற்றம் என்றும் தம்மாமி என்பதனைத் தந்துவை என்றும் வழங்குப' என்று கூறுவர். இவற்றால் சேனாவரையர் ஆற்றூர்ச் சேனாவரையரே எனலாம்.

## சமயம் :

பிற உரையாசிரியர்களது சொல்லதிகாரப் பகுதியில் காணப்படாத நான்கு கடவுள் வாழ்த்துச் செய்யுட்கள் இவருரையினை யுடைய சொல்லதிகாரத்தில் உள்ளன. இச் செய்யுட்கள் நான்கும் முறையே விநாயகர், சிவன், கலைமகள், அகத்தியன் வணக்கமாகக் காணப்படுகின்றன. இவைகள் இவரால் செய்யப்பட்டன என்பர். அவ்வாறாயின் இவர் சைவ சமயத்தவர் என்று கூறலாம்.

## உரையின் இயல்பு :

இவர் உரை தர்க்க முறைப்படி அமைந்தது. ஒருவர் கருத்தினை மறுக்கும்போது படிப்படியாகக் காரணங்கள் காட்டி மறுத்துச் செல்வார். இவரிடத்துக் காணப்படும்

1. 165 of 1929 - 30.

சிறப்பியல்பு இம் மறுப்பின் உயர்வேயாகும். இவர் இவ்வாறு மறுக்கும்போது, உரையாசிரியர் கருத்துக்களை மிக அழகாக மறுக்கிறார். சில இடங்களில் உரையாசிரியர் கருத்தினை எடுத்துக்காட்டி இது போலியுரை என மறுப்பர். இங்குப் போலியுரை என்பது உரையாசிரியர் உரையில் புகுந்த இடைச் செருகலாகலாம் என்று கருதுவர். சேனாவரையர் பெயரை எடுத்துக்கூறிப் பல இடங்களில் நச்சினார்க்கினியர் மறுத்துச் செல்வர்.

சேனாவரையரின் சொல்லிலக்கணம் தனி ஆராய்ச்சிக் குரியது. பல புதிய கொள்கைகளை இவர் வகுத்துச் சென்றுள்ளார். உண்ணா கிடந்தனம் உண்ணா விருந்தனம் என்னும் சொற்களில் கிட, இரு என்பன நிகழ்காலம் காட்டிற்று என்று கூறுவார். காலங்களைப்பற்றிக் கூறும் போது, இறப்பாவது தொழிலது கழிவு; நிகழ்வாவது தொழில் தொடங்கப்பட்டு முற்றுப்பெறாத நிலைமை; எதிர்வாவது தொழில் பிறவாமை என்று சொல்லுவார்.

**பேராசிரியர் :**

பேராசிரியர் என்னும் பெயர் இயற்பெயரன்று; கல்விச் சிறப்பால் வந்த சிறப்புப் பெயராகும். இப் பெயருடையார் நால்வர் தமிழ் வரலாற்றில் குறிக்கப்படுகின்றனர்.

1. ஆத்திரையன் பேராசிரியன்.[1]
2. திருக்கோவையாருக்கு உரை வரைந்த பேராசிரியர்.
3. செய்யுளிலக்கண ஆசிரியர் என்று யாப்பருங்கல விருத்தியில் குறிக்கப்பெறும் பேராசிரியர்.
4. தொல்காப்பிய உரை எழுதிய பேராசிரியர்.

இந்நால்வருள் திருக்கோவையார் உரை எழுதியவரும் தொல்காப்பிய உரை எழுதியவரும் ஒருவரே என்பர். இது பொருந்தாது. திருக்கோவையாருக்கு உரை எழுதியவர் இவராக இருந்தால், தொல்காப்பிய உரையில் திருக்கோவையார்ப் பாடல்களை மேற்கோளாகக் காட்டாதிருக்க மாட்டார். கோவையைப் பற்றிக் கூறும்போது கூட பிறநூற் செய்யுட்களைக் காட்டுகின்றார். மேலும் திருக்கோவை உரை இவரது ஆயின், தொல்காப்பியத்தில் எழுதினாம் என எங்கேனும் குறிப்பிட்டிருப்பார். அத்தகைய குறிப்பும் இல்லை.

1. 'வலம்புரி முத்தின்' என்ற பொதுப்பாயிரம் இயற்றியவர்.



இன்னும் இருவுரைகளிலும் ஒன்றுக்கொன்று மாறுபட்ட கருத்துக்களும் காணப்படுகின்றன. சான்றாகத் திருக்கோவை உரையாசிரியர் ஐந்திணைப் பெயர் பூவால் வந்தது என்பர். தொல்காப்பிய உரையாசிரியர் நிலத்தால் வந்தது என்பர். ஒருவரே இரு நூலுக்கும் உரை செய்திருப்பின் இவ்வாறு மாறுபடக் கூறும் முரண் ஏற்பட்டிருத்தல் இயலாது. திருக்கோவையார் உரையாசிரியர் 'கூறிற்றிலர்', 'சிறப்பின்மையினீக்கினார்' எனப் பன்மையாகக் கூறுவர். தொல்காப்பிய உரையாசிரியர் 'என்றான்', 'செய்வான் ஆசிரியன்' என ஒருமைப் பாலால் கூறுவர். இவற்றால் திருக்கோவை உரையாசிரியரும், தொல்காப்பிய உரையாசிரியரும் பேராசிரியர் என்னும் பெயர் பூண்ட வேறு வேறு உரையசிரியரே ஆவர்.

யாப்பருங்கல விருத்தியில் குறிக்கப்பட்ட பேராசிரியர் கி.பி. பத்தாம் நூற்றாண்டினரோ அதற்கு முற்பட்டவரோ ஆதல் வேண்டும். அவரைத் தொல்காப்பிய உரையாசிரியர் என்றல் திருமணத்தைப் பேரன் பார்த்தது போன்றாகும். பாயிரம் பாடிய ஆத்திரையன் பேராசிரியர், தொல்காப்பியரோடு தொடர்புடையவராகக் கருதப்படுவதால் இவரினும் வேறாய் இவருக்கு முற்பட்டவர் ஆவர். இப்பெயரினைக் கூறி இப்பாயிரத்தை தொல்காப்பிய உரையாசிரியர் காட்டியுள் ளமை யாலும் இருவரும் வேறானவரே ஆவர்.

**பேராசிரியர் என்னும் பெயர்:**

'பேராசிரியர் கூறிய உரையானும் உணர்க'; 'பேராசிரியர் தாமே மறுத்தவாறு காண்க' என நச்சினார்க்கினியர் எழுதுதலால், நச்சினார்க்கினியர் கால முதலே இப்பெயர் தோன்றிவிட்டது என்னலாம். பேராசிரியர் தாம் வாழ்ந்த காலத்தில் சிறந்த உரையாசிரியராகத் திகழ்ந்தமையால், இவரைப் பெரும் ஆசிரியராகக் கருதிப் பேராசிரியர் என வழங்கியிருக்கலாம்.

**காலமும் சமயமும்:**

இவர் இளம்பூரணருக்குப் பிற்பட்டவர். ஓரிடத்தில்,[1] "செப்பினும் வினாவினும் சினைமுதற் கிளவிக்கு" என்புழி இலேசு கொண்டு உரைப்ப" என்று கூறியுள்ளார். இவ்வாறு

1. தொல்காப்பியம், பொருளதிகாரம், 281 உரை.

உரைப்பவர் இளம்பூரணர் ஆவார் இவ்வாறே இ... உரைப்பவர் இளம்பூரணர் பெயரைச் சுட்டாமல் இடங்களில்' இளம்பூரணர் கொண்டு கூறுவர். இதனால் கி.பி. 12-ஆம் அவருரையைக் கொண்டு கூறுவர் கருதப்படும் இளம்பூரணருக்கு நூற்றாண்டினர் எனக் கருதப்படும் பிறிதோரிடத்தில், 'அணியாக பிற்பட்டவர் என்று கூறலாம். பிறிதோரிடத்தில், 'அணியாக என இக்காலத்து ஆசிரியர் நூல் செய்தாரும் உளர்' என்று குறிப்பிடுகின்றார்.[2] இவ்வாறு குறிப்பிடப் பெறுபவர் தண்டியாசிரியரே ஆவர். தண்டியலங்கார உதாரணப் பாடல்களைப் பேராசிரியர் காட்டுகிறார். ஆதலால் இவர் தண்டியாசிரியருக்கும் பிற்பட்டவர் ஆவர். மற்றோரிடத்தில் 'பதமுடிப் பென்பதோர் இலக்கணம் படைத்துக் கோடலும்' என்று சொல்கின்றார்.[3] இங்கு நன்னூலாரையே சுட்டுகின்றார். எனவே நன்னூலார் காலமாகிய கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டு முற்பகுதிக்கும் பிற்பட்டவர் என்பது தெளியப்படும். 'வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோடு ஐந்துடன் மாண்ட தமைச்சு' (குறள் - 662) என்னும் குறள் உரையில் பரிமேலழகர் கற்றல் அறிதல் என இரண்டாக்கி உரைப்பார் கூற்றை மறுக்கின்றார். இவ்வாறு இரண்டாக்கிக் கூறுபவர் பேராசிரியரே ஆவார். இதனால் பேராசிரியர், பரிமேலழகர் காலமாகிய கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டின் இறுதிக்கும் பதினான்காம் நூற்றாண்டின் தொடக்கத்திற்கும் முந்தியவர் எனக் கொள்ளலாம். எனவே பேராசிரியர் காலம், நன்னூலாருக்கும், பரிமேலழகருக்கும் இடைப்பட்ட காலமாகிய கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டின் இடைப்பகுதி என அறியலாம். ஒட்டக்கூத்தர் உலாப் பாடிய போது பேராசிரியர் நேமிநாதர் பட்டோலை பிடிக்கப் பாடியது எனத் தமிழ் நாவலர் சரிதை கூறும் பேராசிரியர் இவரல்லர். அவர் பேராசிரியராகிய நேமிநாதர் ஆவார்.

இவர் இறையனார் களவியலைக் குறிப்பிடும்போது, பிற்காலத்துப் பெருமானடிகள் களவியல் செய்தாங்குச் செய்யினும்' என இறையனாரைப் பெருமானடிகள் என்பர். இதனைக் கொண்டு இவரைச் சைவசமயத்தினர் என்று கருதுவர். இவர் தம் நூலுள் சிவன், திருமால், பிரமன், முருகன், விநாயகர் பற்றிய தெய்வத் துதிப் பாடல்களைக் காட்டியுள்ளார். இதனால் இவர் வேத வழக்கொடுபட்ட கொள்கையினர் எனலாம்.

1. தொல்காப்பியம், பொருளதிகாரம் 434, 440 உரை.
2. தொல்காப்பியம், பொருளதிகாரம், 312 உரை.
3. தொல்காப்பியம், பொருளதிகாரம் 663 உரை.



## எழுதிய உரைகள்

தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் மெய்ப்பாட்டியல், உவமஇயல், செய்யுளியல், மரபியல் என்னும் பின் நான்கியல்களுக்கே இவர் உரை இப்போது கிடைத்துள்ளது. ஆயினும் இவர் தொல்காப்பியம் பொருளதிகாரம் முழுமைக்கும் உரை எழுதினார் என்பது. 'அகத்திணையியலுள் கூறினாம், களவியலுள் கூறினாம்' என வருவனவற்றால் தெரிகின்றது. 'வலம்புரி முத்தில் குலம்புரி பிறப்பும்' என்னும் பொதுப் பாயிரமும், 'வட வேங்கடம் தென் குமரி' என்னும் சிறப்புப் பாயிரமும் ஒழிந்த சூத்திரங்கள் நூற்பா அகவலாகி நூலின் வேறாகி இன்றியமையாவாயின. அவற்றிற்குச் சூத்திர உரையொடு மயங்காமல் வேறு உரையும் ஆண்டு எழுதப் பட்டது' என இவர் கூறுதலால் அவற்றிற்கும் இவர் உரை எழுதியிருந்தார் போலும்.

பேராசிரியர், குறுந்தொகை முதல் முந்நூற்று எண்பது பாடல்களுக்கு உரை எழுதினார் என நச்சினார்க்கினியர் உரைச் சிறப்புப் பாயிரம் கூறுகின்றது.[1]

'நல்லறி வுடைய தொல்பே ராசான்
கல்வியும் காட்சியும் காசினி அறியப்
பொருடெரி குறுந்தொகை இருபது பாட்டிற்கு
இதுபொருள் என்றவன் எழுதா தொழிய
இதுபொருள் என்றதற் கேற்ப உரைத்தும்.'

என உள்ளது. பேராசிரியர் குறுந்தொகைக்கு உரை எழுதினார் என்பதனை, நச்சினார்க்கினியர், தொல்காப்பிய உரையில், "யானே ஈண்டையேனே' என்னும் குறுந்தொகையில், பேராசிரியரும், 'மீனெறி தூண்டில்' என்பதனை ஏனையுவமம் என்றார்" எனக் கூறுதலால் அறியலாம். பேராசிரியர் எழுதிய இக்குறுந்தொகை உரை இப்போது கிடைக்கவில்லை.

## சில வரலாற்றுக் குறிப்புகள்:

இவரைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புக்கள் ஏதும் அறிய இயலவில்லை. சிலர், இவர் மதுரையைச் சார்ந்தவர் என்பர். இதனால் இவர் மதுரையாசிரியர் என்று கூறப்படுவர் என்றும் சொல்வர். வேறு சிலர் சோழ நாட்டினர் என்பர். இவரை ஆதரித்தவன் விக்கிரம சோழன் காலத்தில் வாழ்ந்த வல்லமன்

1. தொல்காப்பியம், பொருளதிகாரம், 653 உரை.

என்னும் நுளம்ப அரசன் என்றும் கூறுவர். இவ்வாறு கூறுவோர் வல்லமனைப்பற்றி இவர் உரையில் மேற்கோளாக வந்திருக்கும் பாடல்கள் இவர் பாடியன என்று காட்டுவர். இதற்கு வேறு சான்றுகள் இல்லை.

இவ்வாறே இவ்வுரையில் சீர், தொடை முதலியனவற்றைத் தொகுத்துரைக்கும் சூத்திரங்களும் இவர் இயற்றியனவே என்பர். இச் சூத்திரங்களில் சிலவற்றை இவர் உரைச் சூத்திரம் எனக் குறிப்பிடுதல் இதற்குச் சான்றாகலாம்.

இவர் பேராசிரியர் என வழங்கப்படுதல்கொண்டு இளம் பூரணர் முதலிய அனைவருக்கும் ஆசிரியர் எனப் பின் வந்தோர் முடிவுகட்டிவிட்டனர். இது பெயரால் அமைந்த விளைவாகும்.

## உரைப்போக்கு:

உரையாசிரியர் என்ற நிலையில் பேராசிரியர் பெற்ற புகழ் கிரேக்க ரோமநாட்டுப் புகழினும் உயர்ந்தது என்பர் எம். எஸ். பூர்ணலிங்கம்பிள்ளை அவர்கள். செய்யுளியலுக்கு இவர் எழுதி யிருக்கும் உரை மிக அரிய உரையாகும். இவர் இசைத் தமிழும் நாடகத் தமிழும் வல்லவர்; வடமொழி அறிந்தவர். பிற இலக்கண ஆசிரியர்களை மறுக்கும்போது அவர்கள் பெயர் கூறாமலே மறுத்துச் செல்வார். தமக்கு உடன் பாடில்லாத செய்திகளைச் சொல்லுமிடத்து பிறரும் சொல்லுப, பிறரும் மயங்குப என்று கூறுவார். இவர் உரையால் பல அரிய செய்திகள் புலனாகின்றன.

தொல்காப்பியம் செய்யுளியலைத் தனி அதிகாரமாக்கி யாப்பதிகாரம் என இவர் காலத்துச் சிலர் வழங்கினர் போலும். இதனை, 'மற்றிதனை யாப்பதிகாரம் என வேறோர் அதிகாரமாக்கி உரைப்பாருமுளர். அங்ஙனம் கூறின் வழக்கதிகாரம் எனவும் வேறு வேண்டுமெனமறுக்க' என இவர் எழுதிச் செல்லுதலால் அறியலாம். காக்கைபாடினியார் இருவர் என்பதும் இருவரும் நூல் செய்தார் என்பதும் இவருரையால் தெரிகின்றன. நோக்கு என்னும் செய்யுள் உறுப்பிற்கு, 'முல்லை வைந்நுனை தோன்ற' என்ற அகநானூற்றுப் பாடலை இவர் எடுத்துக் காட்டி விளக்கி யிருக்கும் திறம் அறிந்து அறிந்து மகிழ்தற்கு உரியது. இவ்வாறு செய்யுள் நலம் பாராட்டும் சீர்மையினை இவர் உரைப் போக்கில் காண்கிறோம்.



தொல்காப்பிய நூற்பாக்கள் சில இவர் காலத்திலேயே பாடவேறுபாட்டுடன் வழங்கின என்பது இவருரையால் தெரிகிறது.[1] சில பாடவேறுபாடுகளைக் குறிக்கும் போது, 'ஒன்பஃதென்ப உணர்ந்திசினோரே' என்பது பழம் பாடம் ஆகலானும்'[2] என்றாற்போலப் பழமைக்கு முதலிடம் தந்து முன்னிற்பர்.

## நச்சினார்க்கினியர்:

அமிழ்தினும், இனிய தமிழ் மடவரல் செய் அருந்தவத்தின் பெரும்பயனாக அவதரித்த அறிஞர் நச்சினார்க்கினியர் என்பர் டாக்டர் உ.வே.சா. அவர்கள். நச்சினார்க்கினியர் தமிழ் உலகிற்குச் செய்திருக்கும் தொண்டு வானினும் உயர்ந்தது.

## பெயர்:

நச்சினார்க்கினியர் என்னும் பெயர் சிவபிரானுக்கு உரியதாகும். இதனை, 'நச்சுவார்க்கினியர் போலும் நாகவீச் சுரவனாரே' எனத் திருநாவுக்கரசரும், 'நச்சினார்க்கினியாய் போற்றி' எனக் காஞ்சிப் புராண ஆசிரியரும் கூறுதலால் அறியலாம். இது இவரது இயற்பெயர் ஆகும்.

## காலம் :

நச்சினார்க்கினியர் நன்னூலாரைக் குறிப்பாக மறுத்துச் செல்கின்றார். இதனால் இவர் நன்னூலாருக்குப் பிற்பட்டவர் ஆவர். இவர் பேராசிரியரின் மாணவர் என்பர். பேராசிரியர் காலம் கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டின் இடைப்பகுதி என்பது முன்பே கூறப்பட்டது. எனவே இவர் அக்காலத்திற்குப் பின்னர் என்பது பெறப்படும். சீவக சிந்தாமணியில் 'தருமணல் தருப்பையார்ந்த' (சீவக 2463) என்னும் செய்யுள் உரையில் கபர்த்திகாரிகைச் சூத்திரத்தை எடுத்தாண்டுள்ளார். கபர்த்தியின் காலம் கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டு என்பர் டாக்டர் பந்தர்கர். ஆதலால் நச்சினார்க்கினியர் கபர்த்திக்கும் பிற்பட்டவர் என்பது புலனாம். திருமுருகாற்றுப்படையில் 'வசிந்து' (அடி. 106) என்பதற்குப் பரிமேலழகர் உரையை மறுத்துப் பொருள் கூறியுள்ளார். ஆதலால் பரிமேலழகருக்கும் பிற்பட்டவர். இவற்றால் நச்சினார்க்கினியர் பேராசிரியரின் மாணவராய் கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டு இடைப்பகுதி

1. தொல்காப்பியம், பொருளதிகாரம், நூற்பா, 255, 304, 368,439, 440.
2. தொல்காப்பியம், பொருளதிகாரம், நூற்பா, 413.

முதல் பரிமேலழகருக்கும் பிற்பட்டு, கி.பி. பதினான்கா நூற்றாண்டுத் தொடக்கம் வரை வாழ்ந்தவர் என்ப விளங்கும். சேனாவரையரை நச்சினார்க்கினியர் மறு பதாலும், சேனாவரையர்காலமும் கி.பி. 14-ம் நூற்றாண்டி ஒட்டி அமைவதாலும் இருவரும் ஒருகால வட்டத்தி உட்பட்டவர் எனலாம்.

**சமயம் :**

இவர் சைவர். 1. சிவபெருமானுடைய பெயரை கொண்டு விளங்குகின்றார். 2. திருச்சிற்றம்பலம், பெரும்பற்ற புலியூர் என்னும் சிவத்தலப் பெயர்களை ஆறெழுத்தொ மொழிக்கும்; ஏழெழுத்தொரு மொழிக்கும் மேற்கோளா தொல்காப்பிய உரையில் காட்டியுள்ளார். 3. திருவாசகம் திருச்சிற்றம்பலக் கோவையார் முதலிய நூல்களிலிருந் இலக்கண இலக்கியப் பொருள்களுக்கும் தத்துவப் பொரு களுக்கும் உதாரணம் தந்துள்ளார். 4. இவரைப்பற்றிக் கூறு உரைச் சிறப்புப்பாயிரம், இவரை, 'தூய ஞானம் நிறைந் சிவச்சுடர், தானேயாகிய தன்மை யாளன்' என பாராட்டுகின்றது. இவற்றாலும், திருமுருகாற்றுப் படைக் எழுதியுள்ள சில நயங்களாலும் இவர் சைவ சமயத்தவர் என் தெள்ளிதின் விளங்கும். இவர் சீவகசிந்தாமணிக்கு உ எழுதுதற்குமுன் சமணராகிச் சைனர்களிடம் சென்று சம உண்மைகளைக் கண்டு உரை கண்டனர் என்பர். ஆதலி இவர் சிலகாலமேனும் சமணராய் வாழ்ந்திருத்தல் வேண்டு எழுத்ததிகாரத்தில், 'வகரம் நெடுங்கணக்கின் ஈறாதற்கு காரணம் வீடுபேற்றிற்கு உரிய ஆண்பால் எழுத்தாதலே' என் இளம்பூரணர் போலக் கூறுகின்றார். இங்குச் சமணமத சாயலையே காண்கிறோம்.

**பிற வரலாற்றுக் குறிப்புக்கள்:**

இவரைப் பற்றிய உரைச் சிறப்புப்பாயிரம்,

'தண்டமிழ் தெரிந்த வண்புகழ் மறையோன்
வண்டிமிர் சோலை மதுராபுரிதனில்
எண்டிசை விளங்க வந்த ஆசான்
பயின்ற கேள்விப் பாரத்து வாசன்'

எனக் கூறுவதால் இவர் மதுரை நகரினர் என்பதும் பாரத்துவாச கோத்திரத்தவர் என்பதும் அறியலாம். தொல் காப்பியத்தின் ஒவ்வோர் இயல் முடிவிலும், மதுரை ஆசிரியர்,



பாரத்துவாசி நச்சினார்க்கினியர் செய்த காண்டிகை உரை முற்றிற்று எனவும், பத்துப்பாட்டின் இறுதியில், மதுரை யாசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் செய்த உரை முற்றிற்று எனவும் குறிப்பிட்டிருத்தலும் காண்க. இவர் ஸ்மார்த்தப் பிராமணர் என்பது இவரது உரையால் தெரிகின்றது. ஸ்மிருதி கூறும் ஒழுக்கத்தை மேற் கொண்டவர்கள் ஸ்மார்த்தர்கள் ஆவர். இவர்கள் அத்வைதிகள். இவர் இக் கொள்கையினர் என்பது, மூன்று பதமாவன:- அது வென்றும், நீயென்றும் ஆனாய் என்றும் கூறும் பதங்களாம். அவை பரமும் சீவனும் அவ்விரண்டும் ஒன்றாதலுமாதலின்' எனத் தொல்காப்பிய உரையிலும்,[1] சீவகசிந்தாமணியில் சில பாடல்களுக்கு[2] எழுதிய உரையிலும் விரிவாய் எழுதிச் செல்லுதலால் அறியலாம்.

**செய்த உரைகள்:**

இவர் தொல்காப்பியம் முழுமைக்கும், பத்துப் பாட்டுக்கும், கலித்தொகைக்கும், குறுந்தொகையில் இருபது செய்யுள்களுக்கும் சிந்தாமணிக்கும் உரைகண்டவர். இதனைப் பின்வரும் வெண்பாவால் அறிக.

'பாரத்தொல் காப்பியமும் பத்துப்பாட் டுங்கலியும்
ஆரக் குறுந்தொகையுள் ஐந்நான்கும் – சாரத்
திருத்தகு மாமுனிசெய் சிந்தா மணியும்
விருத்திநச்சி னார்க்கினிய மே'

பத்துப்பாட்டுரையும் கலித் தொகையுரையும் முழுதும் கிடைத்துள்ளன. குறுந்தொகை இருபதுபாடல் உரை இப்போது கிடைக்கவில்லை. திருக்குறளுக்கு உரை வரைந்த நச்சர் இவரே என்பர். மேலும் நச்சினார்க்கினியரையும் பரிமேலழகரையும் தொடர்புபடுத்தும் கதையொன்றனையும் காட்டுவர். இதற்குரிய ஆதாரங்கள் கிடைக்கவில்லை.

**குறுந்தொகையுரை:**

பேராசிரியர் உரை எழுதாது விடுத்த இருபது செய்யுட்கள் பின் இருபது செய்யுட்களாக இருத்தல் கூடும். இடையிடையே பொருள் தோற்றாமல் விட்ட செய்யுட்கள் என்று கொள்ளுதல், நல்லறிவுடைய தொல்பேராசானாகிய

1. தொல்காப்பியம், பொருளதிகாரம். 188. உரை.
2. சீவகசிந்தாமணி, செய்யுட்கள். 2463, 2464, 2465.

பேராசிரியர் பெருமைக்கு இழுக்காகும். பேராசிரியர் முதுமையில் குறுந்தொகைக்கு உரை எழுதத் தொடங்கி செய்யுட்களுக்கு எழுதி முடித்த பின்னர் நோய் வாய்ப் பட்டதாலோ பிறகாரணத்தாலோ மேல் எழுத இயலா நிலையை அடைந்தனர் என்றே கொள்ளுதல் ஏற்புடைத்தாகும். பிற்காலத்தில் நச்சினார்க்கினியர் அவ்வரிய உரையைப் பின்பற்றி அதற்கேற்ப எஞ்சிய செய்யுட்களுக்கு உரை எழுதியிருத்தல் கூடும்.'

### தொல்காப்பிய உரை:

தொல்காப்பியம் முழுமைக்கும் இவர் உரை எழுதினார் எனினும் பொருளதிகாரத்தில் மெய்ப்பாட்டியல், உவம இயல், மரபியல் ஆகிய மூன்று இயல்களுக்கும் உரை கிடைக்க வில்லை. செய்யுளியல் உரை மதுரைத் தமிழ்ச் சங்கத்தாரால் பதித்து வெளியிடப் பெற்றுள்ளது. இவர் தொல்காப்பியத் திற்கே முதலில் ' உரை எழுதியிருத்தல் கூடும் என்று தோன்றுகிறது.'

### உரையின் இயல்பு :

நச்சினார்க்கினியரை இலக்கியக் களஞ்சியம் என்று கூறலாம். உரையெழுதிக் கொண்டு செல்லும் போதே பல நூல்களிலிருந்து மேற்கோள்களைத் தட்டுத் தடையின்றி எடுத்தாளுவார். ஆங்காங்கு ஒருசெய்யுளின் பகுதியையும், சில அடிகளையும், சிற்சில சமயங்களில் முழுச் செய்யுளையும் எடுத்துக் காட்டுவார். தம் நடைப் போக்கிலேயே பல அரிய பெரிய நூற்றொடர்களை அமைத்து அழகு செய்வார். பழைய செய்யுட்களையேனும் கருத்தையேனும் உரைநடைப்படுத்தி எழுதுவார். இவர் எடுத்தாளாத அரிய தமிழ் நூல்கள் இல்லை. எண்பதுக்கு மேற்பட்ட நூல்களைத் தம் நூலகத்துக் குறித்துள்ளார். இவர் கூறும் கடகண்டு, பல்காயம், மோதிரப்பாட்டு, வசைக்கடகம் முதலிய நூல்களை நாம் கேட்டதில்லை.

இவரையும் வடமொழியறியாதவர் என்பர் சிவஞான முனிவர். ஆனால் இவர் உரையை நோக்கும்போது இவர் வடமொழி வல்லார் என்பது பெறப்படும். தமிழ் மொழியில்

1. உ.வே.சா. குறுந்தொகை. முகவுரை பக்கம். 15.
2. கலித்தொகை. 39, 127, சீவகசிந்தாமணி 72, 892. உரைகளைக் காண்க.



மிக்க பற்றுடையவர் 'காலம் உலகம் என்பன வடசொல் அன்று; ஆசிரியர் வடசொற்களை எடுத்தோதி இலக்கணம் கூறாராகலின்' என்பர். பிற ஆசிரியர்கள் பிழைபடப் பொருள் கூறினார் என அறிந்தால், அவர்களை மறுத்துரைக்கச் சிறிதும் அஞ்சாதவர்.

இவர் இலக்கியப் புலமை மிக்கவர் ஆதலால், அவ்விலக்கியங்களுக்கு எல்லாம் தொல்காப்பியத்தில் விதி உண்டு எனக் காட்ட முனைந்திருக்கின்றார். சீவகசிந்தாமணிச் செய்யுட்கள் தொல்காப்பியர் கூறும் பாவின் வழிப்பட்டதே என இவர் வாதிக்கும் திறமையினை இதற்குச்சான்றாகக் கூறலாம். இவ்வாறு கூற முற்படுங்கால் தொல்காப்பியச் சூத்திரங்களைப் பிரித்தும் சிதைத்தும் கூட்டியும் முன்னும் பின்னும் மாட்டேற்றியும் தன் துணிபு உணர்த்த முற்படுகின்றார். இவர் இவ்வாறு மாட்டேற்றிக் கூறுதலைப் பிற்காலத்தார் கண்டிப்பர். ஆனால் இவரோ இவ்வாறு மாட்டேற்றிக் கூறுதல் தொல்காப்பியர்க்கும் உடன்பாடு எனத் தொல்காப்பியரையே சான்றாகக் காட்டுகின்றார்.

தொல்காப்பியனாரைப் பற்றிய கதையினை இவரது உரையில் காண்கிறோம். இக்கதையினை இவர் எங்குப் பெற்றாரோ அறியோம். இவர் உவமை வாயிலாகவும் சில கருத்துக்களை விளக்கிச் செல்வர். 'நூறுகாணம் கொணர்ந்தா னென்றால் அவை பொதிந்த கூறையும் அவையென அடங்குமாறுபோல, 'சந்தனக்கோல் குறுகினும் பிரப்பங்கோ லாகாது;' 'கோட்டுநூறும் மஞ்சளும் கூடிய வழிப் பிறந்த செவ்வண்ணம் போல', 'எள்ளாட்டிய வழியல்லது எண்ணெய் புலப்படாதவாறு போல' என்னும் உவமைகளை நோக்குக. சில நூற்பாக்களுக்கு உரை எழுதும் போது, 'இதற்கு உதாரணம் இக்காலத்து இறந்தன போலும்' என உண்மையினை எழுதிச் செல்வார். இவர் நயம் (பதசாரம்) எழுதுதலில் தலை சிறந்தவர். சிந்தித்துப் புதுவழி காண வேண்டும் என உரை எழுதியவர்.

### நச்சினார்க்கினியர் பெருமை:

இவர் நூல்கள் இயற்றியதாகத் தெரியவில்லை. உரை எழுதியே காலம் கழித்தவர். இவரைப் பற்றிக் கூறும் செய்யுள் ஒன்று 'நச்சினார்க்கினியன் எச்சில் நறுந்தமிழ் நுகர்வர் நல்லோர்' என்று பாராட்டுகின்றது. புலவர்கள் 'உச்சிமேற்

புலவர்கொள் நச்சினார்க்கினியர்' என்று உளம் குளிர சிறப்பிப்பர். பொருளதிகார உரை மிகச் சிறந்தது என்பர். சிவஞான முனிவரின் கண்டனக் கணைகள் அனைத்தும் இவரையே சென்று தாக்குகின்றன. எனினும் இவரது பெருமையைப் புலமையுலகம் குறைத்து மதிக்கவில்லை. இவரது உரைநடைத்தெளிவும் இனிமையும் கண்டு இவரை 'அமுதவாயர்' என்றனர். வடமொழியில் பல நூல்களுக்கு உரை எழுதிப் புகழ்பெற்ற மல்லிநாதசூரி போல இவரும் பல தமிழ் நூல்களுக்கு உரைஎழுதியுள்ள இவரைத் 'தமிழ் மல்லிநாதசூரி' என்பர்.

## தெய்வச்சிலையார்:

தொல்காப்பியம் சொல்லதிகாரத்திற்கு மட்டுமே தெய்வச்சிலையார் உரை உள்ளது. இவ்வுரையினை நோக்கும் போது, இவர் சொல்லதிகாரம் ஒன்றற்கு மட்டும் உரை எழுதினார் என்று தெரிகின்றது. ஏனெனில் பிற அதிகாரங்களுக்கு உரை எழுதிய குறிப்பு இந்நூலில் ஓரிடத்தேனும் பெறப்படவில்லை. இவரைப் பற்றிய வரலாறு மறை பொருளாக உள்ளது.

## பெயரும் சமயம்:

தெய்வச்சிலையார் என்பது திருமாலுக்கு உரிய பெயராகும். திருப்புல்லாணியில் கோயில் கொண்டுள்ள திருமால் பெயர் தெய்வச்சிலையார் என்பதாகும். 'பவ்வத் திரையுலவு புல்லாணி கைதொழுவேன், தெய்வச்சிலையார்க்கு என் சிந்தை நோய் செப்புமினே' என்பது திருமங்கை யாழ்வார் வாக்கு.[1] இப்பெயர் மக்களுக்கு இடப்பட்டு வழங்கியது என்பதைக் கல்வெட்டுக்களால் அறிகிறோம். 'அரையான் அழகியான்';[2] 'விக்கிரம தெய்வச்சிலையான் எடுத்தகை தேவச்சிலைப் பெருமான்'[3] என பாண்டியக் காலிங்கராயரான வரும் கல்வெட்டுத் தொடர்கள் இவ்வுண்மையைப் புலப்படுத்தும். இவர் பெயரினை நோக்கும்போது வைணவர் என்று கூறலாம். ஆனால் நூலினுள் எழுதும் உரையை நோக்கும் போது சைவர் என்பது தெரிகின்றது. 'மந்திரப் பொருள்வயின் ஆஅகுநவும்' என்னும் நூற்பாவின் உரையில், 'மண்ணைச் சுமந்தவன் தானும் வரதராசன் மகன்றானும், எண்ணிய வரகாலி மூன்றுமிரண்டு மரமும் ஓர்யாறும், திண்ணமறிய வல்லார்க்குச் சிவகதியைப் பெறலாமே' என்னும் பாடலை எடுத்துக்காட்டி, இதனுள் மண்ணைச் சுமந்தவன் - ந; வரதராசன் மகன் -ம; வரகாலி மூன்று - சி; இரண்டுமாம் - வா; ஓர்யாறு - ய; எனக் கூற நமசிவாய எனப் பொருளாயிற்று என்பர். மேலும் 'வேதாகமத் துணிவு ஒருவர்க்கு உணர்த்துமிடத்து, உலகும் உயிரும் பரமும் அனாதி; பதியும் பசுவும் பாசமும் அனாதி என வரும். உலகும் உயிரும் பரமும் பசுவும் பொருந்தும் பொருள் ஆனவாறும், பாசமும் பதியும் இவற்றோடு பொருந்தாத பொருள் ஆனவாறும் காண்க' என்று முப்பொருள் உண்மை பற்றி எழுதுவார்.[1] இவற்றால் இவர் சைவரேயாவர்.

1. திவ். பெரிய திருமொழி, 9, 4, 3.
2. 32. of 1920.
3. 391. of 1916.



## காலம்:

நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையாரைக் குறிப்பிடாமை யான் தெய்வச்சிலையார் நச்சினார்க்கினியருக்குப் பிற்பட்டவர் ஆவர். செந்தமிழ் நாடாவது, வையையாற்றின் வடக்கும், மருத யாற்றின் தெற்கும், கருவூரின் கிழக்கும், மருவூரின் மேற்கும் என்று கூறுவர் இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க் கினியர் ஆகியோர். இவர்கள் கூற்றைத் தெய்வச்சிலையார் மறுத்து, வேங்கடமலையின் தெற்கும், குமரியின் வடக்கும், குணகடலின் மேற்கும், குடகடலின் கிக்குமாகிய நிலம் செந்தமிழ் நிலம் என்று நிறுவுவர். இதனால் நச்சினார்க் கினியருக்குப் பிற்பட்டவர் என்பது அறியப்படும். எனவே இவர் காலம் கி.பி. 14-ம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டதாகும்.

## உரைப்போக்கு :

இவ்வுரையாளர் எவர் பெயரையும் எவ்விடத்தும் கூறிற்றிலர். அங்ஙனமே இவர் பெயரையும் எவரும் எங்கும் கூறினார் இலர்.இளம்பூரணர் முதலியோர் உரைப்போக்கு நடைப் போக்குகள் வேறு; இவர் உரைப்போக்கு நடைப் போக்குகள் வேறு.[2] இவர் ஒவ்வோர் இயலின் இறுதியிலும், எழுத்தெண்ணி இத்துணைக் கிரந்தம் எனக் குறிப்பிட்டுள் ளார்; இவ்வுரையின் இறுதியில் 'தெய்வச்சிலையார் எழுதின விருத்தி முடிந்தது' எனக் காணப்படுவதால் இது விருத்தியுரை என அழைக்கப்பட்டது போலும்.

1. தொல். சொல். நூற்பா 32. உரை.
2. தொல். சொல். தெய்வச்சிலையார் உரை; பதிப்புரை. பக்கம். 7

இளம்பூரணர் முதலாயோர் ஒன்றாகக் கொ... நூற்பாவை இவர் இரண்டாகக் கொள்கின்றார். அவர் ... வேறு வேறு நூற்பாக்களாகக் கொண்டவற்றை இவர் ஒன்றா... இணைக்கிறார். ஒரு நூற்பாவின் இறுதியையும் அடுத்... நூற்பாவின் தொடக்கத் தையும் ஒன்றாக்குகின்றார். கொ... பாடங்களும் வேறுபட்டுக் காணப்படுகின்றன. எச்சவிய... இருக்கும் 'இறப்பின் நிகழ்வின்', 'எவ்வயின் வினையும்' 'அவைதாம் தத்தம் கிளவி' என்னும் நூற்பாக்க... வினையியலில் வைத்து உரையெழுது கின்றார். அதற்கு... காரணமும் கூறுகின்றார். 'வினைச் சொற்கள் முற்று... பெயரெச்சமும் வினையெச்சமும் என மூவகைப்படு... அவற்றுள் பெயரெச்சம் வினையெச்சம் என்பன இத்தன்மை... என்று எடுத்தோதி முற்றுச் சொல்லாவது இத்தன்மைய... என்று ஓதிற்றிலர். அதற்கு இலக்கணம் யாங்குப் பெறுது... எனின், எச்சவியலுள் பெறுதும். வினைக்கு இன்றியமையா... முற்றினை ஒழிபியல் கூறுகின்றுழிக் கூறிய அதனா... பெற்றதென்னை எனின், அஃது எமக்குப் புலனாயிற் றன்று... அஃதேல் வினை யிலக்கணம் அறிந்தேனாகும் காலம்... முற்றிலக்கணமும் அறிதல் வேண்டும் அன்றே. அதனை... ஆண்டுக் கூறியவாறு ஈண்டு உரைத்தல் வேண்டும் எனி... உரைக்குமாறு' என எழுதி அச்சூத்திரங்களையும் காட்டி... பொருள் வரைகிறார். இவ்வாறு தொல்காப்பிய... சூத்திரங்களை இயல் விட்டு இயல் மாற்றி ஒழுங்குபெ... அமைக்க வேண்டும் என இவர் எண்ணியுள்ளார். இந்தப் புதி... ஆராய்ச்சித் திறனை இவரிடம் காண்கிறோம்.

உரிச்சொல்லுக்கும் திரிசொல்லுக்கும் இவர் வேறுபாடு... கூறும்போது, உரிச்சொல் குறைச் சொல்லாகி வரும்... திரிசொல் முழுச் சொல்லாகி வரும் என்பர். இயற் சொல்லை... செஞ்சொல் என்பர். பஞ்சத் திராவிடம் என்னும்... சொல்லாட்சியும் விளக்கமும் இவரால் கூறப்படுகின்றன![1] இச்... சொல்லாட்சியும் இவர் காலத்துக்குச் சான்றாதல் கூடும்... உண்பம் என்னும் சொல்லினை உண்+பு+அம் எனப்பிரித்து... உண் தொழில் உணர்த்திற்று; பு. காலம் காட்டிற்று; அம்... பாலுணர்த்திற்று என்பர்.[2] பு. காலம் காட்டிற்று எனக் கூறுதல்... ஆராய்ச்சிக்கு உரியது. இதனைக் கொண்டு இவர்... நன்னூலாருக்கும் முற்பட்டவர் என்றும் கூறுவர். காரணம்... நன்னூலாருக்குப் பிற்பட்டவராயின் இவ்வாறு கூறியிருக்க... மாட்டார் என்பதேயாகும்.

1. தொல். சொல். 395. உரை.
2. தொல். சொல். 195. உரை.



## கல்லாடர் :

கல்லாடர் என்னும் பெயருடன் மூன்று புலவர்களைக் காண்கிறோம். 1. ஒருவர், சங்ககாலப் புலவர். அகநானூற்றில் ஏழு பாடல்களையும் குறுந்தொகையில் இரண்டு பாடல்களையும் புறநானூற்றில் ஐந்துபாடல்களையும் ஆக 14 பாடல்களைப் பாடியவர். 2. மற்றொருவர், கல்லாடம் என்னும் அகப்பொருள் இலக்கிய நூல் இயற்றியவர். இவர் காலம் கி.பி. 6-ம் நூற்றாண்டு என்றும் கி.பி. 8-ம் நூற்றாண்டு என்று கி.பி. 13-ம் நூற்றாண்டு' என்றும் கூறுவர். இவரே திருவள்ளுவர் மாலையில் கல்லாடர் பெயரால் காணப்படும் செய்யுளைப் பாடியவர் என்றும் கூறுவர். 3. வேறொருவர் தொல்காப்பியம் சொல்லதிகாரத்திற்கு உரை கண்ட கல்லாடர் ஆவார்.

கல்லாடம் என்பது ஓர் ஊரின் பெயராகும். இவ்வூரின் பெயர் பற்றி வந்ததே கல்லாடம் என்னும் பெயராகும் என்பர்.

## உரையாசிரியர் கல்லாடார் :

'ஒல்காப் பெருமைத் தொல்காப்பியத்திற்கு உரையிடையிட்ட விரகர் கல்லாடர்' என்னும் தொடர் ஒன்று வழக்கில் உள்ளது. இவர் தொல்காப்பியம் முழுமைக்கும் உரை கண்டார் என்று சொல்லுவர். சென்னை அரசாங்கக் கையெழுத்துப் புத்தக சாலையில் தொல்காப்பியம் கல்லாடனார் விருத்தி' என்னும் பெயடன் சுவடியொன்று இருப்பதாகக் கூறுவர். இச்சுவடியில் சொல்லதிகாரம் உரையே உள்ளது. இதனால் இவர் சேனாவரையர், தெய்வச்சிலையார் போலத் தொல்காப்பியம் சொல்லதிகாரத்திற்கு மட்டும் உரை கண்டார் எனக் கருதலாம். இவருரையின் சில பகுதிகள் ஞானசம்பந்தம் என்னும் இதழில் அச்சாகி வெளிவந்தன. சொல்லதிகாரம் உரை முழுவதையும் சென்னை அரசாங்கக் கையெழுத்துப் புத்தகசாலையினர் விரைவில் வெளியிட இருக்கின்றார்கள். இவ்வுரை வந்தால் இவரைப் பற்றிய பல செய்திகள் புலனாகும்.

## காலம் :

தொல்காப்பிய உரையாசிரியர்கள் இவரைக் குறிப்பிடவில்லை. இவ்வுரைகாரார்களுள் காலத்தால் பிற்பட்டவர் எனக் கருதப்பெறும் நச்சினார்க்கினியரும் இவரைப் பற்றிக் குறிக்க

1. சதாசிவ பண்டாரத்தார், செந்தமிழ், தொகுதி. 15. பக்கம். 114.

வில்லை. இதனால் இவர், நச்சினார்க்கினியருக்
பிற்பட்டவர் என்பது தேற்றம்.[1] இக்கொள்கை வேறொ
றாலும் உறுதியாகிறது. வினைப் பெயரும், தொழிற் பெய
ஆகிய பாகுபாடுகள் நச்சினார்க்கினியர், 'பெயர் நிலை
கிளவி காலம் தோன்றா' என்னும் சூத்திர உரையில் எடுத்
காட்டிய பெயர்ப் பெயரும், வினைப் பெயரும், தொழி
பெயரும் ஆகிய பாகுபாடுகள் கல்லாடர் உரையில் 'அவ்வா
உள்ளன. எனவே கல்லாடர் கி.பி. 13-ம் நூற்றாண்டின் இறு
கி.பி. 14-ம் நூற்றாண்டின் தொடக்கம் எனக் கருதப்படு
நச்சினார்க்கினியருக்குப் பின்னவர் என்பது வெளிப்படை. இ
16-ம் நூற்றாண்டவர் எனக் கருதப்பெறும் பிரயோக விவே
ஆசிரியர் கல்லாடரைப் பற்றிக் குறிப்பிடு கின்றார்.[2] இதனை
நோக்கும்போது கல்லாடர் கி.பி. 14-ம் நூற்றாண்டிற்கும் இ
16-ம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்டவர் என ஒருவாறு முடி
கட்டலாம்.

## உரைப்போக்கு

கல்லாடர் உரை யாரையும் கவர வில்லை. இவ்வு
இளம்பூரணர், நச்சினார்க்கினியர் ஆகியோர் கருத்தினை
பெரிதும் பின்பற்றிச் செல்கின்றது. இளம்பூரணர் காட்டு
உதாரணங்களையும், நச்சினார்க்கினியர் காட்டும் மேற்கோ
களையும் அவ்வாறே அமைத்துக் கொண்டுள்ளார்.

## சிவஞானமுனிவர் :

தொல்காப்பியப் பாயிரத்திற்கும் முதற்சூத்திரத்திற்கு
விருத்தியுரை கண்டவர்; திருவாவடுதுறை ஆதீன அடியவ
கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டினர். இவரைப் பற்றி
வரலாற்றுக் குறிப்புக்களை 'இலக்கண விளக்கம்' என்னு
தலைப்பில் காண்க.

இவர் இவ்விருத்தியுரைகளில் பல இடங்களி
உரையாசிரியரையும் நச்சினார்க்கினியரையும் மறுத்து
செல்கின்றார். சில இடங்களில் பரிமேலழகரையும், இலக்கண
விளக்க ஆசிரியரையும் மறுக்கின்றார். வடமொழியறிந்

1. There is a third kalladar the author of a commentary o
Tolkappiyam collattikaram, which seems to have been writte
after Naccinarkiniyar's time.
- தெ. பா.மீ. The Tamil Plutarch என்னும் நூலி
குறிப்புரையில் பக்கம் 3

2. பிரயோக விவேகம், செய்யுள். 22 உரை.



சேனாவரையரை வானளாவப் புகழ்கின்றார். மிகச் சில இடங்களில் சேனாவரையரையும் மறுக்கிறார். வடநூல் உணர்ந்தார்க்கன்றித் தமிழ் இயல்பு விளங்காது என்பர். இவ்வாறு கூறும் இவரே பிரயோக விவேக ஆசிரியர் கூறும் இருமொழியின் வேறுபாட்டையும் வாங்கி விரிவாக விளக்குகின்றார். 'தமிழ்மொழிப் புணர்ச்சிக் கண்படும் செய்கைகளும், குறியீடுகளும், வினைக்குறிப்பு, வினைத் தொகை, முதலிய சில சொல்லிலக்கணங்களும், உயர்திணை அஃறிணை முதலிய சொற் பாகுபாடுகளும், அகம் புறம் என்னும் பொருட் பாகுபாடுகளும், குறிஞ்சி, வெட்சி முதலிய திணைப் பாகுபாடுகளும், அவற்றின் பகுதிகளும், வெண்பா முதலிய செய்யுளிலக்கணமும், இன்னோரன்ன பிறவும் வடமொழியில் இல்லை' என்பர். இவ்வாறு இருபெரு மொழியின் நுணுக்கமான வேறுபாடுகளை அறிந்தவரும் இவ்வான்றோரே ஆவர். சார்பெழுத்து மூன்று; பத்து அன்று; சிறுபொழுது ஐந்து; ஆறு அன்று; என்னும் ஆராய்ச்சிகள் இவ்வுரைகளில் அமைந்து கிடக்கின்றன. 'எழுத்தெனப் படுவ' என்னும் சூத்திரம் எழுத்து என்னும் குறியிடுதற்கு எழுந்த சூத்திரம் என்று கூறுவர். இச்சூத்திரச் சொற்கள் ஒவ்வொன்றனையும் தனித்தனியே எடுத்து விளக்கும் திறம் இவரது இணையில் புலமையை எடுத்துரைக்கும். இவ்வாறே பாயிரத்திற்கு எழுதும் பதசாரமும் படிப்போர் உள்ளத்தை ஈர்க்கும் ஒண்மையுடையன. இங்குக் கூறப்படும் பல கருத்துக்கள், இவர் திருத்திய - நன்னூல் உரையிலும் காணப்படுகின்றன.

தொல்காப்பியம் என்பதற்கு இவர் கூறும் காரணம் அறிய வேண்டிய தொன்றாகும். 'தொல்காப்பியம் உடையான் என்னும் பொருட் கண் அம்முக்கெட்டு, அன் விகுதி புணர்ந்து, தொல் காப்பியனென நின்று, பின்னர்த் தொல்காப்பியனால் செய்யப்பட்ட நூலென்னும் பொருட்கண் அன்விகுதி கெட்டு, அம் விகுதி புணர்ந்து தொல்காப்பியம் என முடிந்தது.' என்று கூறுவர். இவரது இலக்கணக் கொள்கைகளையும் வகுத்துக் கொள்ளும் புகு வழிகளையும் விரிவாக ஆராய வேண்டும். இவர் இலக்கணத்தில் புகுந்ததற்குக் காரணம் சிவஞான போத உரை காண்பதற்கேயாகும் என்பர்; இது எந்த அளவு உண்மை என்பதனை இவரது இலக்கண உரைகளையும் தத்துவ உரைகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால் புலனாகும். தொல்காப்பிய விருத்தியுரைகளை நோக்கும் போது இவர்

நூல் முழுமைக்கும் உரை செய்ய எண்ணவில்லை என்பது
தம் இலக்கணப் புலமையின் அடையாளத்தைப் பொறிப்பத
காகவே இவ்வுரைகள் எழுதப்பட்டன என்பதும் விளங்காம
போகாது

**அரசஞ்சண்முகனார்:**

தொல்காப்பியப் பாயிரத்திற்கு விருத்தியுரை கண்ட
பேரறிஞர். 1868-ல் பிறந்து 1915-ல் காலஞ் சென்றவர். மதுரை
மாவட்டத்தைச் சேர்ந்த சோழவந்தான் என்னும் ஊரின
இதனால் சோழவந்தான் சண்முகம்பிள்ளை எனவு
அழைக்கப் பெற்றவர். தந்தையார் பெயர் அரசப்ப பிள்ளை
ஆதலின் அரசஞ் சண்முகனார் எனவும் வழங்கப் பெற்றா
இவர் தொல்காப்பியப் பாயிரவிருத்தி, திருக்குற
சண்முகவிருத்தி, நவமணிக்காரிகை நிகண்டு, மாலைமாற்
மாலை, இன்னிசை இருநூறு, மீனாட்சியம்மை சந்த
திருவடிமாலை முதலிய நூல்கள் இயற்றியுள்ளார். இவர்
செந்தமிழ் இதழில் எழுதிய ஆகுபெயர் அன்மொழித் தொகை
பற்றிய ஆராய்ச்சி மிகச் சிறந்த அறிவு விருந்தாகும்.

இவர் தொல்காப்பியம் பாயிரம், நூன்மரபு, மொழி மரபு
என்னும் மூன்றுக்கும் உரை எழுதி முடித்தார் என்பது இவர்
எழுதியிருக்கும் நன்றி கூறல் என்னும் பகுதியால் புலனாகின்
றது. ஆனால் பாயிர உரை மட்டுமே 1905-ல் இவரா
வெளியிடப்பட்டுள்ளது. இப்பாயிர உரை 246 பக்கங்கள்
கொண்ட பேருரையாய் விளங்குகின்றது.

இவர் நன்னூலில் காணப்படும் பொதுப்பாயிர நூற்பாக்
களை மறுத்து உரையெழுதிச் செல்கின்றார். சான்றாகக்
கீழ்வரும் மறுப்பினை நோக்குக.

"முன்னோர் கூறிய உவமத்தின் இயல்புணராது
நன்னூலார் 'மாடக்குச் சித்திரமும் மாநகர்க்குக் கோபுரமு
ஆடமைத்தோள் நல்லார்க் கணியும் போல்' நூற்கு
அணிந்துரையாவதே பாயிரம் எனக் கூறினார். அது
பொருந்தாது. என்னை? பாயிரத்தின் பயன் அணிசெயல்
ஒன்றேயாயின், சித்திரமில் வழியும் மாடம் எனவும், கோபுரம்
இல்வழியும் நகரம் எனவும், மணியில் வழியும் நல்லார் எனவும்
கூறின் இழுக்கின்றாயினாற் போலப் பாயிரமில் வழியும்
பனுவலாம் எனப்பட்டு, நூற்கு இன்றியமையாச் சிறப்பிற்
றாதலை உணர்த்தாமல், 'பாயிரமில்லது பனுவலன்றே' என்ற



முன்னோர் கருத்தோடு முரணுமாதலின் என்பது."
இம்மறுப்பினை நோக்கும் போது இவரது நுண்மாண்
நுழைபுலம் குன்றின் மேலிட்ட விளக்கென ஒளி
வீசுகின்றதைக் காண்கிறோம்.

இவர் உரைப்போக்கிலிருந்து இவர் நன்னூலாரையும் சிவஞான முனிவரையும் மிகக் கண்டித்துச் செல்கின்றார் என அறியலாம். 'அகத்தே தவவொழுக்கம் முற்றாமையான் ஊழ்வயப்பட்டுக் குற்றமுளவாக நூல் செய்த பவணந்தி முனிவர், சிவஞானமுனிவர் முதலாயினார், புறத்தே தவவேடம் உடையவர்' என்பர். எவ்வளவு பெரிய குற்றச்சாட்டு! இவர் உரையால் தெய்வச்சிலையார் உரை உண்டு என்பதனை இவர் அறியவில்லை என்பதும், கல்லாடர் உரை எச்சவியல் ஒழிந்த ஏனைய எட்டு இயல்களுக்கே உள்ளது என்பதும் புலனாகின்றன. மேலும் இறையனார் களவியல் உரை நக்கீரர் செய்ததே என்பதனையும், அவ்வுரையில் பின் வந்தோர் சிலவற்றைச் சேர்த்திருத்தல் வேண்டும் என்பதனையும் விளக்கியுள்ளார். இவ்விருத்தியுரை பாயிரத்தினைப் பற்றிய பல்வேறு வகைப்பட்ட ஆராய்ச்சிகளைக் கொண்டு விளங்குகின்றது.

**ச. சோமசுந்தர பாரதியார்:**

இந்நூற்றாண்டில் வாழ்ந்த சிறந்த தமிழறிஞர். கவியரசர் பாரதியாரோடும், தமிழரசர் வ.உ.சி.யோடும் நெருங்கிப் பழகிய புலமையாளர். நாவலர் பட்டம்பெற்ற சொலல் வல்லர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தால் டாக்டர் பட்டம் வழங்கப் பெற்ற முதியவர். ஆயிரம் பிறைகண்டவர். இவர்காலம் 1879-1959 ஆகும்.

இவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராக வீற்றிருந்து தமிழாட்சி நடத்தியவர். வீறுகொண்ட உரைநடை வரைந்தவர். வழக்கறிஞர் ஆதலால் ஆய்வு நடத்துவதில் கைதேர்ந்தவர். தசரதன் குறையும் கைகேயி நிறையும், திருவள்ளுவர், சேரர் பேரூர், சேரர் தாயமுறை என்பன இவர் வரைந்த ஆராய்ச்சி நூல்கள். மாரிவாயில், மங்கலக் குறிச்சிப் பொங்கல் நிகழ்ச்சி என்னும் நூல்கள் இவர் எழுதிய கவிதை இலக்கிய நூல்கள். இவர் தொல்காப்பியம், அகத்திணையியல், புறத்திணையியல், மெய்ப்பாட்டியல் என்ற மூன்று இயல்களுக்கும் உரை கண்டார்.

தொல்காப்பியம் என்பது வடநூன் மரபினை ஒட்டி வந்த பெயர். ஆதலால் தொல்காப்பியர் என்னும் ஆசிரியர் பெயர் அவரது நூலுக்கு ஆகுபெயராய்த் தொல்காப்பியர் என இருத்தலே தமிழ் மரபு என்பர். இவ்வாறே, எழுத்ததிகாரம், பொருளதிகாரம், சொல்லதிகாரம் என்பன எழுத்துப்படலம், சொற்படலம், பொருட்படலம் என இருத்தல் வேண்டும் எனக்கூறி அவ்வாறே பெயரும் கொண்டார்.

**'கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்**
**முற்படக் கிளந்த எழுதிணை என்ப'**

என்பது பொருளதிகாரத்தின் முதல் நூற்பா. இந்நூற்பாவில் வரும், முற்படக்கிளந்த என்பதற்கு 'இதற்கு முன்னே ஆசிரியர் கூறிப் போந்த' என்று பொருளெழுதி, பின்வருமாறு விளக்கமும் கூறுகின்றார். முற்படக் கிளந்த என்பதனாலே இந்நூற்பாவிற்கு முன் அகத்திணை ஏழாம் என்பதும், அவ்வகத்திணையும் கைக்கிளை, அன்பின் ஐந்திணை, பெருந்திணை என ஏழாக வகுக்கப்படும் என்பதும் ஆகிய இவற்றைச் சுட்டிய சில சூத்திரங்கள் இருந்திருத்தல் வேண்டும். அவை கடல் கோளாலும் புலம் பெயர்தலாலும் வீழ்ந்து மறக்கப் பட்டிருத்தல் வேண்டும் என்பர். இவ்வாறு சில நூற்பாக்களுக்கு இவர் எழுதும் உரை மிகமிகச் சிறப்புடையனவாக உள்ளன.

இவர் பெரும்பாலும் இளம்பூரணர் போல நூலாசிரியரின் கருத்தினையே விளக்க முயலுகிறார். முதலில் கருத்துக் கூறிப் பின் பொருள் விளக்கிக் குறிப்புரை எழுதுவார். இக் குறிப்புரைகள் மிகத்தெளிவாக அமைந்துள்ளன. சில இடங்களில் பிறர் உரைகளை மறுத்துத் தன் கொள்கையை நிலைநாட்டுவார். 'அயலோராயினும் அகற்சி மேற்றே' என்னும் நூற்பாவிற்கு இவர் எழுதும் உரை இம் மறுப்பிற்கு எடுத்துக் காட்டாகும். இவர் உள்ளம் தொல்காப்பியர் கருத்தறிய விழைந்தது என்பதனை இவ்வுரைகள் புலப்படுத்தும்.

## க. வெள்ளைவாரணன் :

இவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழாராய்ச்சித் துறையில் இப்போது துணைப் பேராசிரியராக இருந்துவருகிறார். நல்ல சைவர்; தமிழ் அறிஞர். சங்க காலத்



தமிழ் மக்கள், தமிழ் இலக்கியம் - தொல்காப்பியம், தொல்காப்பியம் - நன்னூல் எழுத்ததிகாரம், பன்னிரு திருமுறை வரலாறு முதலிய நூல்கள் எழுதியுள்ளார். தமிழ் இலக்கியம் - தொல்காப்பியம், தொல்காப்பியம் நன்னூல் எழுத்ததிகாரம் என்னும் இரண்டு நூல்களும் தொல்காப்பிய உரை நூல்கள் என்று கூறலாம்.

தமிழ் இலக்கியம் - தொல்காப்பியம் என்னும் நூலில் நூல் நுதலிய பொருளை விளக்கு முகத்தான் உரையாசிரியர்கள் பலர் கருத்தையும் கூறித் தம் கொள்கையையும் நிலை நாட்டுகிறார், இவர் எழுதிச் செல்லும் உரை பெரும்பாலும் இளம்பூரண அடிகள் கருத்தினையே தழுவிச் செல்கின்றது; சூறாவளி எழுதிப் பலரையும் பறக்கவிட்ட சிவஞான முனிவரை மறுக்கும் இடங்கள் பலவாகும். சில இடங்களில் எல்லா உரையாசிரியருக்கும் மேம்பட்டுச் சங்க இலக்கிய உதவிகொண்டு தொல்காப்பியர் உள்ளத்தினை அணுகுகின்றார். தொல்காப்பியம் - நன்னூல் எழுத்ததிகாரம் புதிய ஆய்வு முறையில் தோன்றிய அரிய நூலாகும். ஒப்பிட்டுப் பார்த்து நிறைகுறை கூறும் போக்கினை இந் நூலில் காண்கிறோம்.

## உரையின் இயல்பு :

"அவன்சோர்பு காத்தல் கடனெனப் படுதலின்
மகன்தாய் உயர்பும் தன்னுயர் பாகும்
செல்வன் மணிமொழி இயல்பாக லான" (கற்பியல். 33)

என்னும் நூற்பாவிற்கு இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் உரையெழுதும்போது மகன் தாய் என்பதற்கு முறையே காமக் கிழத்தி என்றும், பின்முறை வதுவைப் பெருங்கிழத்தி என்றும் பொருள் கொண்டனர். இவர் மகன் தாய் என்பது தலைவியையே சுட்டும் எனக்கொண்டு பின்வருமாறு உரை எழுதியிருப்பது அறிந்து மகிழ்தற்கு உரியது. 'தலைவனது ஒழுக்கத்தில் சோர்வு பிறவாமல் காத்தல் தலைவியின் கடமையாக நூல்களில் சொல்லப் படுதலால், மகனைப் பெற்ற தாயாகிய தலைவி இங்ஙனம் இடித்துரைக்கும் உயர்வுடையவளாதலும், தலைவனது உயர்வாகவே கருதப்படும். எல்லாச் செல்வங்களுக்கும் உரிய தலைவன் அவ்வாறு அன்புடையார்

கண் பணிந்தொழுகுதல் இயல்பே யாகும்.' என்பது அவ்வு
இவ்வுரையில் 'எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளு
செல்வர்க்கே செல்வம் தகைத்து' என்னும் தமிழ்ப் புலவனி
நற்கொள்கை முன்னிற்கிறது.

'அரையளவு குறுகல் மகரமுடைத்தே
இசையிடன் அருகும் தெரியுங்காலை'

என்னும் நூற்பாவையும்,

'உட்பெறு புள்ளி உருவாகும்மே'

என்னும் நூற்பாவையும் ஒன்றாக இணைக்க வேண்டு
என்பதற்கு இவர் காட்டும் காரணம் பொருத்தமும் நயமு
உடையதாகும்.[2] ஆய்தம் என்னும் சொல், 'ஒய்தல் ஆய்த
நிகழ்த்தல் சாஅய், ஆவயினான்கும் உள்ளதன் நுணிக்கு
என்றாராகலின் ஆய்தல் என்ற உரிச் சொல்லடியாகப் பிறந்
ஆய்தம் என்றாகி நுணுகிய ஓசையுடைய எழுத்தென்
பொருளில் வழங்கியிருத்தல் கூடும்.[3] என்பது இவரது தமிழ்
புலமையின் தகைமையினைக் காட்டும். இவர்கள் இவ்வாறே
சொல்லதிகாரம், பொருளதிகாரம் ஆகிய பகுதிகளையும் பி
இலக்கணங்களோடு ஒப்பிட்டு எழுதின் தமிழுலகம் பெரு
பயன் அடையும்.

1. தமிழ் இலக்கிய வரலாறு தொல்காப்பியம் பக்கம். 138.
2. தொல்காப்பியம் நன்னூல் எழுத்ததிகாரம். பக்கம். 46, 47.
3. தொல்காப்பியம் நன்னூல் எழுத்ததிகாரம், பக்கம். 31.

4

# இறையனார் அகப்பொருள்

இறையனார் அகப்பொருள் என்னும் இந்நூல் அகப்பொருள் இலக்கணம் கூறுகின்றது. இறையனார் இயற்றியதாதலால் இந்நூல் இறையனார் அகப்பொருள் எனப்பெயர் பெற்றது. அகப்பொருள் இலக்கணத்திலும் களவு இலக்கணத்தை மிகுத்துக் கூறுவதனால் இந்நூல் இறையனார் களவியல் எனவும் பெயர் பெறும்.

## இறையனார்:

இறையனாரை மதுரை ஆலவாய்ச் சோமசுந்தரக் கடவுள் என்று கூறுவர். இந்நூலின் உரை, 'இந்நூல் செய்தார் யாரோ எனின், மால்வரை புரையும் மாடக் கூடல் ஆலவாயில் பால்புரை பசுங்கதிர்க் குழவித் திங்களைக் குறுங்கண்ணி யாகவுடைய அழலவிர் சோதி அருமறைக் கடவுள்' எனச் செப்புகின்றது. களவியல் நூல் இறைவனால் இயற்றப் பெற்றது என்னும் இக்கொள்கை, இடைக்காலத்தில் வாழ்ந்த பெரியோர் எல்லோராலும் உடன்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

எனினும் இக்கொள்கையை உலகியலில் நின்று ஆராய் வார்க்கு, இறையனார் களவியல், தொல்காப்பியப் பொருளதிகாரத்தைக் கற்று வல்ல புலவரொருவரால் அகப் பொருள் இலக்கணத்தைச் சருக்கமாகக் கூறும் கருத்துடன் இயற்றப் பெற்றதே என்னும் மெய்ம்மை விளங்காமல் போகாது. இந்நூலாசிரியராகிய இறையனார், கடைச்சங்கப் புலவராகிய நக்கீரனாருக்குக் காலத்தால் சிறிது முற்பட்டவராக இருத்தல் வேண்டும் என்பர். குறுந்தொகையில் உள்ள, 'கொங்கு தேர் வாழ்க்கை' என்னும் செய்யுளைப் பாடிய, இறையனார் எனப் பெயர்பெற்ற கடைச்சங்கப் புலவரே இந் நூலாசிரியராய் இருத்தல் கூடும்.

## காலமும் சமயமும் :

கடைச் சங்கப் புலவர் நக்கீரருக்குச் சிறிது முற்பட்டவர் எனக் கொள்ளின் கி.மு. முதல் அல்லது கி.பி. முதல் நூற்றாண்டு இவர் காலம் எனக் கூறலாம். இவர் சைவர் என்பது கூறாமலே விளங்கும்.

## களவியலின் தோற்றம்:

'ஒரு காலத்தில் பாண்டிய நாடு பன்னீராண்டு பஞ்சத்தால் வாடியது. அரசன் அறிஞர்களையெல்லாம் வளமுள்ள நாட்டுக்கு அனுப்பிவிட்டான். பஞ்சம் தீர்ந்தது. அரசன் நான்கு பக்கங்களிலும் ஆள் அனுப்பி அறிஞர்களை அழைத்துவரச் செய்தான். எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், யாப்பதிகாரம் வல்ல புலவர்களே கிடைத்தனர். பொருளதிகாரம் வல்ல புலவர்கள் கிடைக்கவில்லை. அரசன் உளம் வருந்தினான். இதனையறிந்து மதுரை இறைவன் களவியல் செய்தான்' இவ்வாறு இந்நூல் உரை கூறுகிறது.

## நூல் அமைப்பும் இயல்பும்:

இந்நூல் களவியல் கற்பியல் என்னும் இரண்டு பிரிவுகளை யுடையது. களவியலில் 33 நூற்பாக்களும் கற்பியலில் 27 நூற்பாக்களுமாக 60 நூற்பாக்களையுடையது. தொல்காப்பியர் அகப்பொருள் இலக்கணம் விரிவாகக்கூற, இவர் சுருங்கக் கூறியுள்ளார்.

1. க. வெள்ளைவாரணன், தொல்காப்பியம். பக்கம். 10, 11.



இந்நூற் சூத்திரங்கள் பெரும்பாலும் ஒருவரி இரண்டு வரிச் சூத்திரங்களாகவே காணப்படுகின்றன. 15-ம் சூத்திரம் ஒன்றே பத்துவரிச் சூத்திரமாக உள்ளது. ஏனைய நூற்பாக்கள் 10 வரிக்கு உட்பட்டனவேயாகும். சூத்திரங்களும் எளிமை யுடையன. திட்ப நுட்பம் செறிந்தன. உரைக்க உரைக்கப் பொருள் விரிய இடம் கொடுப்பன.

"அதுவே
தானே அவளே தமியர் காணக்
காமப் புணர்ச்சி இருவயி னொத்தல்"

என்னும் இந்நூலின் இரண்டாம் சூத்திரமும்

"அவையே தானே யாயிரு வினையில்
போக்கு வரவு புரிய ஆணையின்
நீக்கம் இன்றி நிற்கும் அன்றே"

என்னும் சிவஞான போதத்தின் இரண்டாம் சூத்திரமும் ஒப்பு நோக்கத்தக்கன. காதல் இலக்கணம், தத்துவ இலக்கணமாய் உருவெடுக்க முன்னின்றதோ என்ற எழுச்சி ஏற்படுகிறது.

## உரையாசிரியர் :

இந்நூல் அரிய உரையினை உடையது. இவ்வுரை இயற்றியவர் நக்கீரர் என்பர். இவர் கடைச் சங்கப் புலவர் என்று கூறுவர்; வேறு சிலர், கி.பி. ஆறாம் நூற்றாண்டில் தோன்றிய நான்காம் சங்கத்தில் வாழ்ந்த நக்கீரரால் இவ்வுரை இயற்றப்பட்டிருக்கலாம் என்பர். நக்கீரர் என்னும் பெயருடை யார் பலர் என்றும், அவர்கள் வாழ்ந்த காலங்கள் வெவ்வேறானவை என்றும் ஆராய்ச்சியாளர்கள் பிரித்துக் காட்டுவர். கீரன் என்பது இவரது இயற் பெயர் ந. என்பது சிறப்புப் பொருளைத் தருவதோர் இடைச்சொல்; இவ்விரண்டும் சேர்ந்து நக்கீரன் என ஆயிற்று என்பர்.

## களவியல் உரை :

இறையனார் அகப்பொருளுக்கு நக்கீரர், மருதனிள நாகன் முதலிய ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் உரைகூறினர். தாம் தாம் கூறிய உரையே சிறந்தது என்றும் வாதிட்டனர். இதனால் அவர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து, நயவுரை எது என்பதனை முடிவு செய்ய ஒரு நடுநிலையாளரைத் தேர்ந் தெடுத்து அவர்பால் முடிவுக்கு விட எண்ணினர். அவ்வாறே

உப்பூரி குடிகிழான் மகன் உருத்திரசன்மனை நடுநி... யாளராகக் கொண்டனர். இவர் ஊமையர். ஐந்து ஆண்டு... நிறைந்த குழந்தைப் பருவத்தினர். இவர் முன்னிலை... எல்லோரும் தத்தம் உரையைக் கூறினர். இவர் பலருரைகளை... கேட்கும்போது வாளாவிருந்தார். மருதனிள நாகன் உரையை... கேட்கும்போது, சில இடங்களில் கண்ணீர் அரும்... மெய்சிலிர்த்து நின்றார். நக்கீரர் உரையைக் கேட்டபோ... பதம் தோறும் கண்ணீர் வடித்து மெய்ம்மயிர் சிலிர்த்... நின்றார். இதனால் நக்கீரர் உரையே மெய்யுரை யென... கொண்டனர். இவ்வாறு உரை கண்ட வரலாறு இந்நூலுள்... கூறப்பெற்றுள்ளது. இங்குக் குறிக்கப் பெறும் நிகழ்ச்சிகள் உண்மையோ? பொய்யோ? ஆனால் ஒன்று மட்டும் புலனாகின்றது; நக்கீரர் உரை மிகச் சிறந்த உரையெனப் பாராட்டப் பட்டது என்பது. இவ்வுரைச் சிறப்பின் தெய்வத் தன்மையை இக்கதை விளக்குகின்றது என்றுமட்டும் தெரிகின்றது.

**உரை வந்த முறை :**

உரை எவ்வாறு பரம்பரையாக வந்தது என்பதனையும் இந் நூலுரையுள் காண்கிறோம். மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் தம்மகனார் கீரங்கொற்றனார்க்கு உரைத்தார். அவர் இன்னாருக்கு உரைக்க இன்னார் இன்னாருக்கு உரைத்தார் எனக்கூறி இறுதியில் முசறியாசிரியர் நீலகண்டனார்க்கு உரைத்தார் என வருகின்றது. இவ்வுரைக் கூற்றினை நோக்கும் போது இவ்வுரை வாய்மொழியாக வந்து நிலகண்டனார் காலத்தில் உருப்பெற்றிருக்க வேண்டும் என்பர். இவ்வாறு வந்து இப்போது உள்ள உரை நிலைபெற்ற காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு ஆகும் என்று கூறுவர். இதற்குக் காரணம் இவ்வுரையில் உதாரணச் செய்யுட்களாகப் பாண்டிக் கோவைச் செய்யுட்கள் கொடுக்கப் பெற்றுள்ளன என்பதே. இக்கோவை கி.பி. எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த நெடுமாறன் மீது இயற்றப்பட்டதாகும்.

இவ்வுரை நக்கீரனார் இயற்றியதென்று பலரும், நக்கீரர் எழுதியதன்று என்று சிலரும் கூறுவர். நக்கீரர் எழுதியதன்று என்று சொல்பவர்கள், இவ்வுரை ஊர், பெயர் தெரியாத ஒருவரால் இயற்றப்பட்டது என்றும் உரைப்பர்.' பழைய

1. K.S. சீனிவாசப்பிள்ளை. தமிழ் வரலாறு, பிற்பாகம். பக்கம். 17-23.



உரையாசிரியர்களாகிய அடியார்க்கு நல்லார், பேராசிரியர் முதலியோர், நக்கீரரே உரையாசிரியர் என்று தெளிவாகக் கூறுவர்.

**உரையின் இயல்பு :**

இவ்வுரை வரலாற்று உரையாக விளங்குகின்றது. சங்கங்களைப் பற்றிக் குறிப்பிடும் முதல் உரை இவ்வுரையேயாகும். உரை நூல்களுள் முற்பட்டதும் இவ்வுரையே எனலாம். முதல் இரண்டு சூத்திரங்களைப்பற்றிய உரை மிக இனிமையாக அமைந்துள்ளது. உரை, கவிதைபோலக் காட்சியளிக்கின்றது. எதுகையும் மோனையும் இயைந்து செல்லச் சுவையோடு நடக்கிறது.

சிற்றின்பத்தில் பேரின்பத்தை இணைத்து உரைவரையத் தொடங்கியவர் இவராவர். சிற்றின்பம் பேரின்பத்தின் அடிப்படை என்பது இவர் கொள்கை. 'மனிதர்களின் நடைமுறை வாழ்வில் காணப்படுவதெல்லாம் வெறும் பெருந்திணைக் காமம் தான் என்றும், நெறியற்ற கீழான இன்ப வாழ்க்கையையே மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்றும் மனிதன் அறிந்து கொள்ளும் போது, உயர்தரமான இன்பம் எதுவென்று அவன் ஆராயத் தொடங்குவான் என்பது களவியல் உரைகாரர் கருத்து ஆகும்.'

**சங்கங்கள் பற்றி :**

**தலைச்சங்கம்**

| | |
|---|---|
| இடம் | : கடல் கொண்ட மதுரை. |
| இருந்த காலம் | : 4440. ஆண்டு. |
| ஆதரித்த அரசர்கள் | : காய்சின வழுதி முதலாகக் கடுங்கோன் ஈறாக 89 அரசர்கள். |
| சங்கப் புலவர்கள் | : 549. பேர். |
| பாடிய புலவர்கள் | : 4449. பேர். |
| பாடிய அரசர்கள் | : 7. பேர். |
| பாடிய நூல்கள் | : எத்துணையோ பரிபாடல், முதுநாரை, முதுகுருகு, களரியாவிரை முதலியன. |

1. மு. அண்ணாமலை, வள்ளுவர் தனித்தன்மை. பக்கம் 24, 25.

வழங்கிய இலக்கணம் : அகத்தியம்.

இருந்த சில புலவர்கள்: அகத்தியனார், திரிபுரமெரித்த விரிசடைக் கடவுள், குன்றெறிந்த முருகவேள், முரஞ்சியூர் முடி நாகராயர், நிதியின் கிழவன் முதலியோர்.

**இடைச் சங்கம் :**

இடம் : கபாடபுரம்.

இருந்த காலம் : 3700. ஆண்டு.

ஆதரித்த அரசர்கள் : வெண்தேர்ச் செழியன் முதலாக முடத்திருமாறன் ஈறாக 59 அரசர்கள்.

சங்கப் புலவர்கள் : 59 பேர்.

பாடிய புலவர்கள் : 3700 பேர்.

பாடிய அரசர்கள் : 5 பேர்.

பாடிய நூல்கள் : கலி, குருகு, வெண்டாளி, வியாழ மாலை அகவல் முதலியன.

வழங்கிய இலக்கணம் : அகத்தியம், தொல்காப்பியம், மாபுராணம், இசை நுணுக்கம், பூதபுராணம்.

இருந்த சில புலவர்கள் : அகத்தியர், தொல்காப்பியர், இருந்தையூர்க் கருங்கோழி மோசி, வெள்ளூர்க்காப்பியன், சிறுபாண்டரங்கன், திரையன் மாறன், துவரைக் கோமான், கீரந்தை முதலியோர்.

**கடைச் சங்கம் :**

இடம் : உத்தர மதுரை.

இருந்த காலம் : 1850 ஆண்டு.

ஆதரித்த அரசர்கள் : முடத்திருமாறன் முதலாக உக்கிரப் பெருவழுதி ஈறாக 49 அரசர்கள்.



சங்கப் புலவர்கள் : 49 பேர்.

பாடிய புலவர்கள் : 449 பேர்.

பாடிய அரசர்கள் : 3 பேர்.

பாடிய நூல்கள் : நெடுந்தொகை, குறுந்தொகை, நற்றிணை, புறநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, நூற்றைம்பது கலி, எழுபது பரிபாடல், கூத்து, வரி, சிற்றிசை, பேரிசை முதலியன.

வழங்கிய இலக்கணம் : அகத்தியம், தொல்காப்பியம்.

இருந்த சில புலவர்கள்: சிறுமேதாவியார், சேந்தம் பூதனார், அறிவுடையரனார், பெருங்குன்றூர்க் கிழார், இளந்திருமாறன், மதுரையாசிரியன் நல்லந்துவனார், மதுரை மருதனிளநாகன், கணக்காயர் மகனார், நக்கீரனார் முதலியோர்.